(ஓசை) கேட்கு மியல்புடைய விடத்துஞ் செவிடாந் தன்மையுடையனவேயாம் (வினையுணருங்) கேள்வியாலே தெளிவு செய்யப்பெறுத ஆள்பினர் செவிகள். ... ... 8.

(வினையாற்றற் பயன்) தன்னிடத்ததாகிய கேள்வியுடையாரல்லாத ஆள்பினர் (தலைவர் மாட்டு) வணங்கி நடக்குந் தன்மையராகுதல் (எக்காலத்தும்) இல்லை. ... ... 9.

சுவையுருவாகிய (சொல்லின்) உள் (வினைப்பயனை) சுவையை அறியாமல் அதற்கிடமான சொல்லையுணரு மிடமுடையார்தா எவ்வகையோரிடத்து வாழினு மென்னை. ... 10.

தெள்ளறிவுகாக்குங்கருவிசெருவார்க்கு
மள்ளழிக்கலாகாவரண். ... ... 1.

சென்றவிடத்தாற்செலவிடாதீதொரீஇ
யொன்றற்பாலுய்ப்பதறிவு. ... ... 2.

எய்ப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினுமப்பொருட்
கய்ப்பொருள்காண்பதறிவு. ... ... 3.

திண்பொருளவாகச்செலச்சொல்லித்தான்பிறர்வா
யண்பொருள்காண்பதறிவு. ... ... 4.

ஓம்பறழீஇயதொட்பமலர்தலு
மேம்பலுமில்லதறிவு. ... ... 5.

ஒவ்வெதுறய்வதுலகமுலகத்தோ
டவ்வதுறய்வதறிவு. ... ... 6.

அக்துளாராவதறிவாரறிவிலா
ரக்தறிகல்லாதவர். ... ... 7.

அஞ்சுவதஞ்சாமய்பேதய்மயஞ்சுவ
தஞ்சலறிவார்தொழில். .. .. 8.

எதிரதாய்க்காக்குமறிவினர்க்கில்லய்
நொதுமல்வருவதோர்நோய். ... ... 9.

உன்னுடயாசெல்லாமுடயாரறிவிலா
ரென்னுடயேனுமிலர். ... ... 10.

(ஊழாளருக்கு வினய்காணுங்) தெள்ளிய அறிவாகிய பாதுகாக்குங்கருவி (உளதாயின்) பகய்வருக்கும் அடுத்தழித்தல் கூடாத அரணும். ... ... 1.

(ஊழாளர் மனஞ்) சென்றவிடத்தாலெல்லாஞ் செல்லவிடாமல் தீமய்பயப்பதயொழித்து (நன்மய்) பொருந்துமிடத்தய்க் (கண்டு அதிற்) செலுத்துவதே அறிவாம். ... 2.

(ஊழாளர்) பொருந்திய பொருளுரய்களய் யாவர் யாவர் வாயாற் கேட்டவிடத்தும் அந்தப் பொருள்களுள் (பெருக்கிற்கு) இடமான பொருள்களய்க் காண்பதே அறிவாம். 3.

(ஊழாளன்) திண்ணிய பொருளுள்ளனவாகக் (கேட்பவருள்ளத்திற்) செல்லும்படி கூறித் தான்பிறரிடத்தும் (பெருக்கம்) பொருந்தும் பொருளய்க் காண்பதே யறிவாம். 4.

(ஊழாளர் தமராவாரய்த் தேர்ந்து) ஓம்புதலய்த் தழுவியதே ஒண்மயாம் (அது ஒருகால்) விரிதலும் (ஒருகாற்) சுருங்கலும் இல்லாததே (காட்சி) அறிவாம். ... ... 5.

ஒப்பி எதன்கண்ணே யுறய்கின்றது உலகம் அந்த உலகத்தோடு அந்த விதமாகவே (ஊழாளர் தமக்களோடி) பொருந்தியிருப்பதே அறிவாம். ... ... 6.

அகக்காண்புடய ஊழாளர் (தமக்கினம்) ஆகும்வினயய் அறிபவராவார் அவ்வறிவில்லாதவராவார் (அந்த) அகக்காண்பய் அறிதலல்லாதவர். ... ... 7.

அஞ்சத்தக்க வினயில் அஞ்சாதிருக்கும் பண்பானது மடமயாம் அஞ்சி நடக்கும் வினயில் அஞ்சி நடத்தல் (இனம்) அறியு மூழாளரது தொழிலாம். ... ... 8.

(ஒரு துன்பம்) வருதற்கு முன்னுகவே (கண்டு அது வராவண்ணங்) காக்கின்ற அறிவிடமுடய ஊழாளர்க்கில்லயாம் வருத்தமுண்டாவதாகிய ஒரு துன்பம். ... 9.

(வினய் நலங்காணுங்) உள்ளறிவுடய ஊழாளரே எல்லா நலங்களுமுடயராவார் அவ்வறிவில்லாதவர் (வேறு) என்ன செல்வமுடயாராலும் வறியராம். ... ... 10.

செருக்குஞ்சினமுஞ்சிறுமையுமில்லார்
பெருக்கம்பெருமிதநீர்த்து. ... ... 1.

வவ்வலுமாண்பிறந்தமானமுமாணை
வெவ்வழுமேதமிறய்க்கு. ... ... 2.

கொள்ளாகொட்குற்றம்வரினும்பனைத்துணையாப்
பள்ளும்பழிநாணுவார். ... ... 3.

குற்றமேகாக்கப்பொருளாகக்குற்றமே
தற்றந்தருஉம்பகை. ... ... 4.

வய்த்தூறுகாவாதான்வாழ்க்கையெரிமுன்னர்ப்
பொய்த்தூறுபோலக்கெடும். ... ... 5.

பின்குற்றநீக்கிப்பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறய்க்கு. ... ... 6.

செயற்பாலசெய்யாதிவறியான்செல்வ
மயற்பாலதன்றிக்கெடும். ... ... 7.

எண்ணுள்ளமென்னுமிவறன்மயெற்றுள்ளு
மண்ணப்படுவதொன்றன்று. ... ... 8.

நன்றுறவெஞ்ஞான்றுந்தன்னய்நயவற்க
வென்றிபயவாவினய். ... ... 9.

காதலகாதலறியாமயுய்க்கிற்பி
னேதிலவேதிலார்நூல். ... ...10.

(யான் எனது என்றெழும்) அகங்காரமும் கோபமும் அற்பத்தன்மையுமில்லாத காண்பினரதுபெருக்கமே (பயனாற்) பெருமையான இத குணமுடையதாம். ... ... 1.

(பிறர் பொருளய்க்) கவர்தலும் நன்மய் கடந்த மானமும் மாட்சிமய்ப்படாத துக்கமுமாகிய இவய் குற்றமாம் (பெருக்கால்) தலய்மய்பூண்ட காண்பினற்கு. ... 2.

தம்முட்குற்றம்) பெரூத காண்பினர் (தம்வினய்களில்) எள்ளளவு குற்றம் வந்த விடத்தும் பனயளவாகத் தாழ்த்தும்பழி (வந்ததாக நினய்ந்து) வெள்குவார். ... 3.

(காண்பினர்) குற்றம் படுவினய்களயே (தம்பால் வரர்மற்) காக்கக் கடவர்(பெருகு)பொருளாக அக்குற்றம் படுவினயே (பிறரால்) பந்தித்தல் தரும்பகயாம் (ஆதலால்). ... 4.

(பெருகும் வினயிற் சிந்தய்) வய்த்து (இடயில்வரும்) ஊறுபாடுகளய்க் காவல் செய்யாத காண்பினன் வாழ்க்கயானது தீயின் மூற்பட்ட பொக்குத்தூறுபோற் கரிந்துபோம்.5.

(தன்னய்ப்) பற்றிய குற்றமொழித்து அயலாரது குற்றங் காணும் வலியுடயனய விடத்து என்னெனப்படுங் குற்றமுண்டாம் (பெருக்கால்) தலய்மய் பூண்டகாண்பினற்கு. 6.

(பெருகச்) செய்யற்பாலனவாய வினய்களய்ச் செய்யாமல் மறப்புற்ற காண்பினன் செல்வமானது அயற்பால் வினயுமல்லாமற் கெட்டொழியும். ... ... 7.

(காண்பினருக்குப் பெருக்கந்தரும் வினய்களய்) நினயுமுள்ளமென்கின்ற மறப்பின்மயானது எத்தன்மய்த்தான குற்றத்துள்ளும் பொருந்தப் படுவதொன்றன்றும். ... 8.

(காண்பினன்) நன்மய்பெருக எக்காலத்துந் தனக்குரிய அழகாக விரும்பாதொழிக வெற்றியய்ச் கொடாத (வீண்) செயல்களய். ... ... 9.

(காண்பினர்பெருக்கமாக) விரும்பிய பொருள்களயும் விருப்பத்தயும் (பிறர்) அறியாப் பண்புகளாற் செலுத்துமிடத்து ஏது இல்லனவாம் பகய்வரது எண்ணங்கள். ... 10.

அறனறிந்துமூத்தவறிவுடையார்கேண்மய்
திறனறிந்துதேர்ந்துகொளல். ... ... 1.

உற்றநோய்நீக்கியுறுஅமய்முற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல். ... ... 2.

பேணவற்றுளெல்லாமரிதேபெரியாரய்க்
கோணித்தமராக்கொளல். ... ... 3.

தம்மிற்பெரியார்தமராவொழுகுத
லிம்மயுளெல்லாந்தலய். ... ... 4.

வாழ்வார்கண்ணுகவொழுகலான்மன்னவன்
சூழ்வாரய்ச்சூழ்ந்துகொளல். ... ... 5.

தக்காரினத்தனுய்த்தாளுழுகவல்லானய்
சிக்கார்செயக்கிடந்ததில். ... ... 6.

இடிக்குந்துணயாரயாள்வாரயாரே
தடுக்குந்தகயமயவர். ... ... 7.

இடிப்பாரயில்லாதவேமராமன்னன்
கெடுப்பாரிலானுங்கெடும். ... ... 8.

ஓர்விலார்க்கூதியமில்லய்மதலயா
மேர்பிலார்க்கில்லய்நிலய். ... ... 9.

பல்லார்பகய்கொளலிற்பத்தடுத்ததீமய்த்தே
தொல்லார்தொடர்கய்விடல். ... ... 10.

(காண்பினர்) அறஞ்செய்தலயறிந்து முதிர்ந்த அறிவுட யாரய்த் தமராகச் செய்புந்தன்மையறிந்து தெளிந்து (பற் றுக்கோடாகக்) கொள்ளுதல் வேண்டும். ... ... 1.

(காண்பினர் தம்பாற்) பொருந்திய துன்பங்களய்ப் போக் கிப் (பின்பவய்) வராதவிதமாக முற்படக்காக்குந் தன்மயு டயாரய்த் (தமராகப்) பேணிக்கொள்ளுதல் வேண்டும். 2.

(காண்பினர்) பேணத்தக்கவய்களுளெல்லாம் அருமயே யாமென்று (வினயிற்) பெரியோரய்ப் (பணிவாய்) வளய்ந் து தமராகக்கொள்ளுதல் வேண்டும். ... ... 3.

(காண்பினர்) தம்மிடத்த (வினயாற்) பெரியோரய்த்தமரா க்கக்கொண்டு நடத்தல் இம்மயில் தாம் (செய்யும் வினயுள்) எல்லாம் தலய்மயுடயதாம். ... ... 4.

(தன்வினயுடன் கலந்து) வாழ்பவரப்க் கண்ணுக்கொ ண்டு நடக்கவேண்டுமாதலால் நிலய்த்த காண்பினன் ஆய்ப வரய் ஆய்ந்துகொள்ளுதல் வேண்டும். .... 5.

(வினயால்) தகுதியுடயோரய்த் (தனக்குத்) தமராயினு ணய்த் தான் நடக்கவல்ல காண்பினனய்ப் பகய்வர் (கேடு) செய்யக்கிடந்த தொன்றுமில்லய். ... ... 6.

(தவறுகண்ட விடத்து) இடித்துப் (புத்தி கூறுந்) துண யாவாரய் ஆளுங்காண்பினரய் எவரோ (வினயால்) தடுக்குந் தகுதியுடயராவார். .. .. 7.

(தவறுகண்ட விடத்து) இடித்துப் (புத்தி) கூறுவாரய்த் (தமராக) இல்லாத காவலற்று மன்னிய காண்பினன் (வாழ் வு) கெடுப்பவரில்லாமலுங் கெட்டுவிடும். 8

(மூதலய்) ஆய்ந்தறியாத வர்த்தகர்க்கு இலர்பமில்லய் (அதுபோற் றமர் என்னும்) மரக்கலமாகிய அழகில்லாத காண்பினருக்கு இல்லயாம் (வினய்க்கடலில்) நிலய். 9.

(காண்பினர்) பலரோடு பகய்கொள்ளுமிடத்து (உண்டா குந்தீமயினும்) பத்துமடங் கதிகமான தீமயுடயதேயாம் (வினயிற்)பழமயான அறிவுடயாரதுதொடர்பய்விடுதல்.10.

சிற்றினமஞ்சும்பெருமய்சிறுமய்தான்
சுற்றமாச்சூழ்ந்துவிடும். ... ... 1.

நிலத்தியல்பானீர்திரிந்தற்றுகுமாந்தர்க்
கலத்தியல்பதாகுமறிவு. ... ... 2.

உன்னுனுமாந்தர்க்குணர்ச்சியினத்தாலு
மின்னுனெனப்படுஞ்சொல். ... ... 3.

உனத்துளதுபோலக்காட்டியொருவற்
கனய்த்துளதாகுமறிவு. ... ... 4.

இனந்தூய்மய்செய்வினய்தூய்மயிரண்டு
மனந்தூய்மய்தூவாவருும். ... ... 5.

இல்லின்றூய்தெச்சநன்றுகுமினந்தூயார்க்
கல்லநன்றுகாவினய். ... ... 6.

வல்லரான்மன்னுயிர்க்காக்கமினநலம்
புல்லாப்புகழுந்தரும். ... ... 7.

தனநலநன்குடயராயினுஞ்சான்றோர்க்
கினநலமேமாப்புடய்த்து. ... ... 8.

மனநலத்தினுகுமறுமய்மற்றக்து
மினநலத்தினேமாப்புடய்த்து. ... ... 9.

தொல்லினத்தினுங்குதுணயில்லய்தீயினத்தி
னில்லற்படுப்பதூஉமில். ... ... 10.

சிற்றறிவுக் கூட்டத்தய்ச் (சேரப்) பயப்படுங் (காண்பின ராய) பேரறிவுக் கூட்டம் சிற்றறிவுக் கூட்டம் தானுகவே சுற்றமாக வளய்ந்து (பேரறிவய்) விட்டுவிடும். ... 1.

பூமியின் பண்பால் (அதய்ச்சேர்ந்த) நீரானது (தன்றன் மய்) வேறுபட்டு அப்பூமியின் றன்மய்த் தாம் (அதுபோற் காண்புறு) மாந்தர்க்கு இனத்தளவியற்கயதாகு மறிவு. 2.

உள்ளறிவாலுண்டாகும் (காண்புறு) மனுடர்க்கு (வின யாற்றும்) உயர்வானது (சார்ந்த) இனத்தாலுண்டாகும் (இவன்) இய்யுடிப்பட்டவ னெனப்படுஞ் சொல்லானது. 3

(வினயாற்றல்) மனத்தின்கண் உள்ளதுபோலக்காட்டி (காண்பினரய) ஒருவனுக்கு (இனச்சார்பெவ்வளவோ) அவ்வளவே உள்ளதாகும் அறிவானது. ... .. 4.

(காண்பினருக்கு) இனந்தூய்மயாதலும் செய்கின்ற வி னய்தூய்மயாதலுமாகிய இரண்டும் மனத்தினதுதூய்ம யயே ஆதரவாக்கொண்டுவரும். ... ... 5.

(ஒருவர்க்கு) இல்லிடத்துள்ள தூய்மயாற் சந்ததிக்கு நன்மயுண்டாகும் இனத்தூய்மயுடய காண்பினருக்கு அல லனவாகும் நன்மயுண்டாகாத செயல்கள். .... 6.

(வினயால்) வலிமயுடயாரால் (அவர்பால்) மன்னிய உயிர்கட்கு ஆக்கமாம் (காண்பினருக்கு) இன நன்மயானது (பிறவாற்) பொருந்தாத கீர்த்திமுழுவதயுந் தரும். ... 7.

பொருள் நன்மய்கள் நன்முக உண்டாயி ஞாயவிடத்தும் நிறய்வுடய காண்பினருக்கு இனமாகிய நலமே இன்பம் வ ளய்ந்துகொள்ளுந் தன்மயுடயதாம். ... ... 8.

(காண்பினருக்கு) மன நன்மயிடத்தாலுண்டாகும் மறு மயின்பம் வேறுய (அந்த) அகவின்பமும் (சார்ந்த) இன நலத்தினு லின்பம் வளப்ந்துகொள்ளுந் தன்மயுடயதாம். 9.

(காண்பினருக்கு) பழமயான இனமானேரிடத்தினு மே லானதுணயில்லய் தீயகூட்டத்தாரிடத்தினும் (மேலான) தன்பத்தயுண்டாக்குவதும் இல்லய். ... ... 10.

ஆதமும்வதூஉமாகிவழிபயக்குஞ்
சேதனர்ச்சூழ்ந்துசெயல். ... ... 1.

தெரிந்தவினத்தொடுதேர்ந்தெண்ணிச்செய்வார்க்
கிரும்பொருள்யாதொன்றுமில். ... ... 2.

தேக்கங்கருதிமுதலிழக்குஞ்செய்வின
யாக்காரறிவுடையார். ... ... 3.

ஏதமதனய்த்தொடங்காரிளிவென்னு
மாதப்பாடஞ்சுபவர். ... ... 4.

ஏத்துறச்சூழாதெழுதல்பகய்வரய்ப்
பாத்திப்படுப்பதோராறு. ... ... 5.

செய்தக்கவல்லசெயக்கெடுஞ்செய்தக்க
வய்யாமயானுங்கெடும். ... ... 6.

கண்ணித்துணிகருமந்துணிந்தபி
னெண்ணுவமென்பதிழுக்கு. ... ... 7.

ஆற்றின்வருந்தாவருத்தம்பலர்நின்று
போற்றினும்பொத்துப்படும். ... ... 8.

ஒன்றுற்றலுள்ளுந்தவறுண்டவரவர்க்
கன்றறிந்தாற்றுக்கடய். ... ... 9.

எள்ளாதவெண்ணிச்செயல்வேண்டுந்தம்மொடு
கொள்ளாதகொள்ளாதுலகு. ... ... 10.

(ஊழாளர் ஒருவினய் செய்யுமிடத்து) ஆதரவும் உண்டாகு மிலாபமுமாகி வழிவழியாகப் பயன்செய்கின்ற அறிவினரோடு தேர்வுற்றுச் செய்தல் வேண்டும். ... 1.

(வினயாற்றல்) தெரிந்த இனத்தாருடனே தேர்வுற்றுப் (பின்புதாமுங்) கருதிச்செய்யு மூழாளர்க்குக் (கய்கூடாத) பெரியபொருள் யாதொன்றுமில்லய். ... ... 2.

(பொருள்பெருகி) நிறய்தலய் நினய்ந்து (முன்புள்ள) மூதலயுமிழந்துவிடுஞ் செய்தொழிலய்ச் செய்யார் (வினய்வலிபெற்ற) அறிவுடய ஊழாளர். ... ... 3.

(தமக்குக்) குற்றமுண்டாகும் அவ்வினயய்த் தொடங்குதல் செய்யார் (வலிமய்க்கு) இளிவென்கிற ஆதரவுப்பெருமய்க்குப் பயப்படு மூழாளர். ... ... 4.

(பொழுதுடயார்) புகழும்படியாக (ஊழாளர்) தேராது (ஒருவினய்செயற்கு) எழுதலானது பகய்வரய்த் (தம்) பங்கிற் சேர்ப்பதாகிய ஒருவழியாம். ... ... 5.

(உழாளர் பொழுது தேர்ந்து) செய்யத்தக்கன அல்லாதவற்றய்ச்செய்யப் (பயன்) கெடும் செய்யத்தக்கவய்கள் (அவ்வாறு செய்து) விளங்காமயாலுங்கெடும். ... ... 6.

ஊழாளர் வினயாற்றுமிடத்தய்த் தேர்வாக) நினய்ந்து துணியக்கடவர் வினயில் (அவ்வாறு) துணிவுற்றபின்பு தேர்வு கொள்ளுவோ மென்பது இழுக்கமாம். ... 7.

(இடந்தேரும்) வழியிடத்து நின்று (ஊழாளர்) வருந்தாதவருத்தமானது பலபேர் நின்று பாதுகாக்குமிடத்தும் புரய்பட்டு (முடிவுறுது) ஒழியும். ... ... 8.

(ஊழாளர்) ஒரோதன்மயான நன்மயே செய்தலுள்ளுந் தவறுண்டாம் அவரவர்கட்கு அவ்வக்காலமறிந்து (அவ்வவ்வினய்களய்ச்) செய்யாத இடத்து. ... ... 9.

(ஊழாளர் பிறர்) இகழாத வினய்களய்த் (தேரக்) கருதிச் செய்தல்வேண்டும் தம்மோடு (ஏற்றுக்) கொள்ளாதவய்களைக கொள்ளமாட்டாது உலகம் (ஆதலால்) 10.

வணைவலியுந்தன்வலியுமாற்றுன்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல். ... ... 1.

அல்லதறிவதறிந்ததன்கட்டங்கிச்
செல்வார்க்குச்செல்லாததில். ... ... 2.

உடைத்தம்வலியறியாருக்கத்தினூக்கி
மூடைக்கண்மூரிந்தார்பலர். ... ... 3.

அரிந்தாங்கொழுகானளவறியான்றன்னை
வியந்தான்விரைந்துகெடும். ... ... 4.

சாலவேல்சாகாடுமச்சிறுமப்பண்ட
மேலமிகுத்துப்பெயின். ... ... 5.

உணிக்கொம்பேறினூரக்கிறந்தூக்கின்
வினைக்கிறுதியாகிவிடும். ... ... 6.

ஆற்றினளவறிந்தீகவதுபொருள்
மாற்றிவழங்குநெறி. ... ... 7.

ஆகாறளவிட்டிதாயினுங்கேடில்லை
காகாறகலாக்கடை. ... ... 8.

மல்லாய்ந்துவாழாதான்வாழ்க்கையுளபோலக்
கில்லாகித்தோன்றுக்கெடும். ... ... 9.

உளவரைதூக்காதவொப்புரவாண்மை
வளவரைவல்லைக்கெடும். ... ... 10.

(தேர்வினன்றன்) வளத்தினது வலிமையும் தன்வலிமையும் பகைவனது வலிமையும் (அவன்) துணைவலிமையுஞ் சீர்தூக்கி (ஒரு வினைப்) செய்தல்வேண்டும். ... ... 1.

(பயன் படுவினைப்) அல்லாததையும் (பயனுடையதாய்) அறிவதையும் (முன்பே) அறிந்து அப்பயன்படுவினையிடத்துத் தரித்து நடக்குந் தேர்வினருக்கு நடவா வினையில்லை. 2.

ஊடையத்தாகிய தமது வலிமையை (இவ்வளவென) அறியாராகி மனவெழுச்சியினிடத்து நடத்தி மூடக்கம் வந்தவிடத்து (முடியாது) மூரிவுற்றோரு (மூலகிற்) பலராம். 3.

(செய்தற்குரிய வற்றைச்) செய்து அவ்வினையிடத்து நடவாளுத் (தன்வலி) அளவறியாளுத் தன்னை வியக்குந் தோர்வியற்றோன் (நிலை) விரைவிற் கெட்டுவிடும். .... 4.

(பண்டங்களை) மிகுதியாக எற்றுக்கொள்ளும் (வலி) உடையவண்டியு மச்சுமுரிந்துபோம் அந்தப்பண்டங்களைப் மேலிடத்ததாக மிகச்செய்து பெய்யுமிடத்து. ... ... 5.

(மரத்திலேற) நினைந்து கொம்புடையராயேறிய ஒருவர் (அந்த) அகவலிகடந்து செலுத்துமிடத்து (அவர்) வினைக்கு மிறுதியுண்டாகி (உயிரும்) விட்டொழியும். ... 6.

(தேர்வினர் உதவி) செய்யுமிடத்துத் (தமக்குள்ள) அளவறிந்து கொடுக்கக்கடவர் அதுவே பொருள்களைக் (கயமாமுக) மாற்றிவழங்கும் வழியாம். ... ... 7.

(பொருள்) வரும்வழியானது அளவாற் சிறிதாயவிடத்தும் (தேர்வினருக்குக்) கெடுதலில்லையாம் இசையுக்கும் பகைவழி விரியாதிருக்குமிடத்து. ... ... 8.

(தனக்குள்ள பொருள்வலி) வளத்தை ஆராய்ந்து வாழாத் தேர்வினன்வாழ்க்கையானது உள்ளதுபோல வலியுடையதாகிக் காட்டிப்புலப்படாது கெட்டு விடும். ... ... 9.

(தேர்வினர்தமக்கு) உள்ளனவற்றின் அளவைச் சீர்தூக்கியறியாத ஒப்புரவாகிய ஒளியுடையவளத்தின் வரம்பு விரைவாகக் கொட்டொழியும். ... ... 10.

காந்துகாற்கூகையக்காக்கையிகல்வெல்லும்
வேந்தர்க்குவேண்டும்பொழுது. ... ... 1.

ஓராநாளொட்டவொழுகறிருவினைய்
ஈராமையார்க்குங்கயிறு. ... ... 2.

காலமன்றென்பவுளவோகருவியாற்
சீலமறிந்துசெயின். ... ... 3.

கருதாகருதினுங்கைகூடுங்காலத்
திருகியிடத்தாற்செயின். .. .. 4.

காலங்கருதியிருப்பர்கலங்காது
பாலங்கருதுபவர். ... ... 5.

ஊக்கமுடையாளுடுக்கம்பொருதகர்
தாக்கற்குப்பேருந்தகைத்து. ... ... 6.

பொள்ளெனவாங்கேபுறம்வேராக்காலம்பார்த்
துள்வேர்ப்பரொள்ளியவர். ... ... 7.

காணலர்க்காணிற்சுமக்கவிறுவரை
சாணிற்கிழக்காந்தலை. ... ... 8.

எய்தற்கரியதியைந்தக்காலந்நிலையே
செய்தற்கரியசெயல். ... ... 9.

கொக்கொக்கக்கூம்பும்பருவத்துமற்றதன்
சிக்கொக்கசீர்த்தவிடத்து. ... ... 10.

(சூரியன்) காந்திசெய்யும் பகற்காலத்தில் கூகயய்க் காக்க யானது பொருதுவெல்லும் (அதுபோல்) விரும்பப்படுந் தேர்வின்ருக்கு வேண்டுங்காலமூடய்மய். ... ... 1.

(தேர்வினர் வினய்நலத்தய்) ஆராய்ந்து காலத்தோடு பொருந்த நடத்தல்வேண்டும் (அது) செல்வத்தய்த் தமதிடம் வேறுபடாமற் கட்டுங்கயிறும். ... ... 2.

(தேர்வினருக்குக்) காலம் அன்று என்பதாகிய வினய்களு முள்ளனவோ (முடித்தற்குரிய) கருவிகளால் ஒழுக்கத்தயறிந்து செய்யுமிடத்து. ... ... 3.

(தேர்வினர்) நினய்க்கவொண்ணுத பெரியவினய்களய் நினய்க்குமிடத்துங் கய்வந்துகூடும் காலத்துடன் திரும்பி இடத்தாலாகச் செய்யுமிடத்து. ... . 4.

(தம்வினய்முடித்தற்குரிய) காலத்தய்நினய்ந்து (அறியார் போல) இருப்பர் (தமது நிலய்) கலங்காமலொளியய் விருப்புந் தேர்வினா. ... ... 5.

மனவெழுச்சியுடய தேர்வினன் (தன்வினய் முடித்தற்குரிய காலம்பார்த்திருக்கும்) ஒடுக்கமானது போர்க்கடா (மாறுகெடப்) பாய்தற்குப்பின் வாங்குந் தகயதாம். ... 6.

(பகய்நேர்ந்தவிடத்தும்) பொள்ளலென்னும்படி அவ்விடத்தே புறத்தாரறிய வேர்வுமுராய் (வெலலற்குரிய) காலம்பார்த்துள்ளே வேர்பபர் ஒள்ளியதேர்வினர். ... 7.

(தேர்வினர்) பகய்வரய்க்காணுமிடத்து (வெல்லற்குரிய காலம்வருமளவும்) பொறுக்கக்கடவர் முடிவளவிற் சாணிடத்ததாய்க் கவிழ்ந்துவிடு மவர்தலய். ... ... 8.

(தேர்வினர் தமச்குக்) கிடய்ப்பதற்கரிய ஒருபொருள் எதிர் பெறக்கிடய்க்குமிடத்து அந்நின்றபொழுதே (அதுபெறச்) செய்தற்கரிய வினய்களய்ச் செய்தல்வேண்டும். 9.

(தேர்வினர் இரய்தேருங்) கொக்குப்போல்க ஒடுங்க வேண்டுங்காலத்தில் பின்பு அக்கொக்கின் பற்றுதலய்ப் பேரல்க (காலம்) சிறப்புாக வாய்த்தவிடத்து. 10.

இடங்கடந்தெவ்வினையுமெள்ளற்கமுற்று
மடங்காதபின்னல்லது. ... ... 1.

ஆக்கமார்மொய்ம்பினவர்க்குமரண்சேர்ந்தாந்
தாக்கம்பலவுந்தரும். ... ... 2.

ஆற்றுருமாற்றியடுபவிடனறிந்து
போற்றுர்கட்போற்றிச்செயின். ... ... 3.

எண்ணியாரொண்ணமிழப்பரிடனறிந்து
திண்ணியார்துன்னிச்செயின். ... ... 4.

ஆங்கயத்துவெல்லுமுதலயடும்புனலி
ஞங்கிலதனய்ப்பிற. ... ... 5.

கடலோடாகால்வனெடுந்தேர்கடலேய்
நெடுநாவாயோடாநிலத்து. ... ... 6.

அண்ணூக்கமல்லாற்றுணய்வேண்டாவெஞ்சாம
பெண்ணியிடத்தாற்செயின். ... ... 7.

சேக்கயுளான்செல்லிடஞ்சேரினுறுபடயா
னுக்கமழிந்துவிடும். ... ... 8.

சிறய்நலனுஞ்சீருமிலரெனினுமாந்த
ருறய்நிலத்தோடொட்டலரிது. ... ... 9.

காலாழ்களரினரியடுங்கண்ணஞ்சாக்
காலாண்முகத்தகளிறு. ... ... 10.

(தேர்வினர் தமக்குரிய) இடத்தய்க்கடந்து எந்தவினய்கள யும் மிகழாதிருக்கக்கடவர் (ஏனென்றால்) முழுவதும் (யாவருக்கும்) அடங்குதல்பெறுத சிக்கலதுவாம். ... 1.

செல்வம் நிறய்ந்த வலிமயிடத்த தேர்வினருக்கும் (தமக்குரிய) அரணிடத்தய்ச் சேர்ந்துண்டாகுகின்ற உரமானது அழகு பலவற்றயுங்கொடுக்கும். ... ... 2.

(ஏக்காலத்தேனும் ஒருவினயய்ச்) செய்யாத தேர்வினரும் செய்துமுடிப்பவராவார் (முடிக்கு) மிடச்செயலறிந்து பகய்வர்கண்பால்(தம்மய்ப்)பாதுகாத்துச்செய்யுமிடத்து. 3.

(வெல்லுதற்) கெண்ணிய பகய்வர் அவ்வெண்ணமிழந்து போவார் (தேர்வினர்) இடச்செயலறிந்து திட்பமுடையாராய் (வெல்லுநிலயய்) அடுத்துச்செய்யுமிடத்து. ... 4.

(தனக்கிடம்) ஆகிய குளத்தின்கண் (பிறவுயிர்களயெல்லாம்) வெல்லும்முதலயான்று வென்றுவிடும் புனலினிடத்தில்லாது நீங்கிய அம்முதலயய்ப் பிறவுயிர்கள். ... 5.

கடலின்கண் ஓடாவாங்கால்களால் வலியுற்ற நெடியதேர்களானவய் அக்கடலய் (இடமாகச்) சேர்ந்த நெடியகப்பல்கள் ஓடாவாம் நிலத்தின்கண். ... ... 6.

(தேர்வினருக்குப்) பொருந்திய மனவெழுச்சியல்லாமல் (வெறு) துணய் வேண்டுவதில்லய் குறய்வுறுமயய் ஆராய்ந்து (உரிய) இடத்தாற் செய்யுமிடத்து. ... ... 7.

(தனக்குரிய) சேர்விடத்துள்ளவனது (வினய்) செல்லுமிடத்தயடயுமிடத்துப் பொருந்திய படயுடயதேர்வினனது (முன்புள்ள) ஆக்கமு மழிந்துபோம். ... ... 8.

(தம்மய்க்காத்தற்குரிய) கோட்டய் நலஞ்செய்தலும் (படய்ச்) செல்வமும் இல்லலென்னுமிடத்துந் (தேர்வுள்) மாந்தர் உறயுமிடத்துச்சென்றுபொருதல்(பிறர்க்கு)அரிதாம். 9.

கால்கள் புதய்வதாய களர்நிலத்திடத்து நரிகளானவய் வென்றுவிடும் இடங்கண்டஞ்சாத காலாட்களய் (கொம்பிற் குத்திக்கொண்ட) முகத்ததாகிய யானயய். ... 10.

எறுழ்பொருளின்பழுயிரச்சநான்கின்
றிறந்தெரிந்துதேறப்படும். ... ... 1.

மாணீறுகுற்றத்தினீங்கிவடுப்பரியுஞ்
சேணூழான்கட்டேதெளிவு. ... ... 2.

அன்மயக்கற்றுசற்றுர்கண்ணுந்தெரியுங்கா
லின்மயரிதேவெளிறு. ... ... 3.

நகய்நாடிக்குற்றமுநாடியவற்றுண்
மிகய்நாடிமிக்ககொளல். ... ... 4.

இருமய்க்குமேனய்ச்சிறுமக்குந்தத்தங்
கருமமேகட்டளய்க்கல். ... ... 5.

உற்றுரய்த்தேறுதலோம்புகமற்றவர்
பற்றிலர்நாணுர்பழி. ... ... 6.

காதன்மய்கந்தாவறிவறியார்த்தேறுத
லேதமயெல்லாந்தரும். ... ... 7.

தேரான்பிறனய்த்தெளிந்தான்வழிமுறய்
தாராவிடும்பய்தரும். ... ... 8.

தேறற்கயாரயுந்தேராதுதேர்ந்தபிற்
றேறுகதேறும்பொருள். ... ... 9.

தேரான்றெளிவுந்தெளிந்தான்கணய்யுறவுந்
தாராவிடும்பய்தரும். ... ... 10.

(இயம்முறையவர்) வலிமையப்(பயம்)பொருட்(பயம்)இன்பப் (பயம்) உயிர்ப்பயம் (என்னும்) நான்கிடத்த திறங்களைத் தெரிந்து (உள்ள நாளிற்) றெளியவே (பயன்) உண்டாம். 1.

மாட்சிகெடுக்குங் குற்றத்தின்கண் ஒதுங்கி வடுவுறு வினயில் வருத்தங்கொள்ளு மூயர்முயல்வுடையானிடத்தே (ஊழாண்டியய் பயனுளதெனல்) தெளிவாம். ... ... 2.

அல்லாதவய்களைக் கற்று (ஆள்பாற்) குற்றமற்ற இயம்முறையவரிடத்துந் தெரிந்து பார்க்குங்காலத்து இல்லாமையருமையாம்(பயனில் வேறுய) வெள்ளறிவு. ... ... 3.

(ஆள்பிற்குரிய) விளக்கத்தைப் பார்த்துக் குற்றத்தையும் பார்த்து அவற்றுள் மிகுதியைப்பார்த்து அதிகமாயினவற்றய் (இயம்முறையவர்) கொள்ளல் வேண்டும். ... ... 4.

(காண்புற்ற இயம்முறையவரது) பெருமையக்கும் அதுவல்லாத சிறுமையக்கும் தமது தமது வினயகளே (பயன் விளங்கக்காட்டுங்) கட்டளையக்கல்லாம். ... ... 5.

(இயம்முறையவர் பயனுற) வந்தடைந்தவரைய்க் (காணில்) தேறுதலொழிக (ஏனெனில்) வேறுகிய அவர் பற்று ஒன்றுமில்லராதலால் வெள்காச் பழிச்செயற்கு. ... 6.

(இயம்முறையவர்) காதற்பண்பேபற்றுக்கோட்டாக அறிய வேண்டுமவயகளையறியாதாரய் (இனமாத்) தேர்தலானது குற்றப்பண்புகளெல்லாவற்றையுங்கொடுக்கும். ... 7.

தேர்தல் செய்யாதுய் (இடம்பேர்ந்த) பிறனய் (இனமாகத்) தெளிந்த இயம்முறையவனுக்குவழிவழியாகப் (பிறதீமய்கள்) தராத் துன்பங்களய் (அதுவே) கொடுக்கும். 8.

(இயம்முறையவரினமாகத்) தேறுதலொழிக (இடங்கடந்த) யாவரையும் தேர்ச்சிசெய்யாது தேர்ச்சிசெய்தபின்பு தேறக்கடவர் தேறவேண்டும் பயனய். ... ... 9.

(இயம்முறையவர்க்குப்பயன்) தேராதானிடத்து வய்த்ததெளிவும் தெளிந்தானிடத்து வய்த்த சந்தேகமும் (பிறவாற்) கொடுக்கமுடியாத துன்பத்தய்க்கொடுக்கும். ... 10.

நன்மயுந்தீமயுநாடி நலம்புரிந்த
பன்மயாளுளப்படும். ... ... 1.

வாரிபெருக்கிவளம்படுத்துற்றவய்
சீராய்வான்செய்கவினய். ... ... 2.

அன்பறிவுதேற்றமவாவின்மயிந்நான்குந்
தென்புடயான்கட்டேதெளிவு. ... ... 3.

வேழுகத்தேறியக்கண்ணும்வினய்வகயான்
மாழுகுமாந்தர்பலர். ... ... 4.

அறிந்தாற்றிற்செய்கிற்பார்க்கல்லால்வினய்தா
னறந்தானென்றேவற்பாற்றன்று. ... ... 5.

கய்யனய்நாடிவினய்நாடிக்காலத்தோ
டுய்யவுணர்ந்துசெயல். ... ... 6.

இதனயிதனுலிவன்முடிக்குமென்றுய்ந்
ததனயவன்கண்விடல். ... ... 7.

பிதிர்விலனய்நாடியபின்றயவனய்
அதற்குரியனுகச்செயல். ... ... 8.

வினய்க்கண்வினயுடயான்கேண்மய்வேழுக
நினய்ப்பானய்நீங்குந்திரு. ... ... 9.

நாடோறுநாடுகமன்னன்வினய்செய்வான்
கோடாமய்கோடாதுலகு. ... ... 10.

(இயல்முறையவர்) நற்பண்பையுந் தீப்பண்பையும் நாடுதல் செய்து நல்வினையிரும்பியபான்மையுடையானை ஆளுதல் கொள்ளவே (அவ்வாட்சிக்குரிய பயன்) உண்டாம். ... 1.

வருவாயைப்பெருகச்செய்து (அதனைற் பல) வளத்தையுண்டாக்கிப் பொருந்திய அவ்வளங்கட்குரிய சிறப்பை ஆய்பவனை (இயல்முறையவன் நாடல்) புரிகவினையை. ... 2.

(இன) அன்பும் (வினை) அறிவும் (பயன்) தெளிவும் (பொருள்) ஆசையின்மையுமாகிய இந்நான்கும் நன்முக உடைய இயல்முறையவனிடத்தேயாங் (கொள்கைத்) தெளிவு. ... 3.

வேறுவிதமுடையராகத் தெளிவுகொண்ட விடத்தும் (தத் தமுட்கோளுற்ற) வினை வகுப்பால் (அதின்) மாறுடையராகு மாந்தரும் (இயல் முறையிற்) பலராம். ... ... 4.

(வேந்தாதலை) அறிந்து (அதற்குரிய) வழியிடத்துச் செய்யவல்ல இயல் முறையவர்க்கல்லால் வினை செய்தல் அறந்தானென்று ஏவம்பான்மையுடையதன்று. ... ... 5.

(இயல்முறையவர் வேந்து) இடமுடையானை நாடுதல்செய்து வினையையும் நாடுதல்செய்து (முடித்தற்குரிய) காலத்தோடு உய்யும்படி உணர்வுற்றுச் செய்தல்வேண்டும். ... 6.

(இயல்முறையவர்) இந்த வினையை இந்த ஏதுவால் இவன் (மனம்) முடிவுசெய்யுமென்று ஆராய்ந்து அந்த வினையை அவனிடத்து (ஏவுக) விடுதல்வேண்டும். ... ... 7.

(இயல்முறையவர் ஏண்மையில் மனம்) வேறுபடாதவனை நாடுதல் செய்தபின்பு அவ்வேணுடையானை (எவ்வினையினின்றுமே) அவ்வினைக்கே உரியனுகச் செய்தல்வேண்டும். 8.

வினையிடத்து விடாமுயற்சியுடையவனது கேளாந்தன்மையை வேறுக நினைக்கு மியல் முறையவனை விட்டொழிந்துபோம் (முன்புள்ள) செல்வமும். ... ... 9.

(இயல்முறையவர்) நாள்கடோறும் நாடுதல்செய்க நிலை பெற்ற நல்ல வினைகளை (அவற்றைச்) செய்பவனதுநேர்மையால் நேர்மையாந் தன்மையுடையது உலகம். ... ... 10.

பற்றற்றகண் ணும்பழமய்பாராட்டுத
லுற்றுறவர்கண் ணேயுள. ... ... 1.

ஆக்கமார்சுற்றமியயினருப்பமுத்
தாக்குப்பலவுந்தரும். ... ... 2.

கோடமுனில்லாதான்வாழ்க்கய்குளவளா
நீடின்றிநீர்நிறய்ந்தற்று. ... ... 3.

சுற்றித்தாற்சுற்றப்படவொழுகல்செல்வந்தான்
பெற்றத்தாற்பெற்றபயன். ... ... 4.

அற்றமுமின்சொலுமாற்றினடக்கிய
சுற்றத்தாற்சுற்றப்படும். ... ... 5.

பெருங்கொடயான்பேணன்வெகுளியவனின்
மருங்குடயார்மானிலத்தில். ... ... 6.

காக்கய்கரவாகரய்ந்துண ணுமாக்கமு
மாக்கய்நீரார்க்கேயுள. ... ... 7.

விதிநோக்கான்வேந்தன்வரிசயாநோக்கின்
மதிநோக்கிவாழ்வார்பலர். ... ... 8.

சூரணத்தற்றுறந்தார்சுற்றமமராமய்
வாரணமின்றிவரும். ... ... 9.

வழிப்பிரிந்துகாரணத்தின்வந்தானய்வேந்த
னிழய்த்திருந்தெண்ணிக்கொளல். ... ... 10.

(பொருண்முதலிய) பற்றுக்களற்றவிடத்தும் பழமய் (கோடலும்) பாராட்டுதலுமாகிய இவய்பொருந்திய உறவுற்ற நாடாளரிடத்தே உள்ளனவாம். ... ... 1.

(நாடாளருக்கு) ஆக்கம் நிறய்ந்த சுற்றமானது பொருந்தக்கிடய்க்குமிடத்துக் (கோடற்பயன்) கிளய்த்தலுந் வலிமய் பலவற்றயுங் கொடுக்கும். ... ... 2.

(புகழ்) கொள்ளுதல் தன்னிலில்லாத நாடாளனது வாழ்க்கயானது குளவளாகம் நெடியகரயில்லாமல் நீரால் நிறய்ந்த அத்தன்மய்த்தாம். ... ... 3.

(நாடாளர் தமக்குச்) சுற்றமானவராலே சுற்றிக்கொள்ளும்படி நடத்தல்வேண்டும் செல்வத்தய்த்தானுகப்பெற்ற அதனுற்பெற்ற (புகழ்ப்) பயன் (அதுவேயாம்). ... ... 4.

(நாடாளர்) சமயத்துதவுமுதவியும் இனியசொல்லும் செய்யுமிடத்து (அவருக்கு) நெருக்கிய சுற்றத்தாராலே சுற்றும்படியான (திகழ்வு) உண்டாம். ... ... 5.

(நாடாளன்) பெரியகொடயுடயாளுய்ப் பேணுதல்செய்யான் கோபத்தய் (என்றும்) அவனிடத்துப்பக்கத்தே (திகழ்வாக) உடயராவார் பெரியநிலத்தின்கண். ... ... 6.

காக்கய்களானவய் (இரய்கண்டவிடத்து) ஓழியாமல் (இனத்தய்) அழய்த்துண்ணும் (அதுபோல் ஓளிபெறும்) ஆக்கமும் (இனப்) பற்றுடய நீர்மயாளர்க்கே உளவாம். 7.

விதியய்நோக்காளுய் (வினயய்) விரும்பப்பெறு நாடாளன். (சுற்றங்கொள்ளும்) வரிசயாலே நோக்குமிடத்து அவ்வறி(வொளியய்) நோக்கி வாழ்பவர்பலராம். ... ... 8.

(யாதேனுமொரு காரணத்தால்) அச்சமுண்டாகவே தன்னிற்றுறந்தவர் (நாடாளராய) சுற்றத்துத்தங்காமய் (வேறெவ்விதமான) தடயுமில்லாமலே வந்துசேரும். ... 9.

(தனக்குரிய) இடம் பிரிந்துபோய்ப் (பின்பொரு) காரண இடத்தால வந்தவனய் விரும்பப்பெறும் நாடாளன் அழுத்தமாக இருந்தாராய்ந்து (இனமாகக்) கோடல்வேண்டும். 10.

விதவெகுளியிற்றீதேசிறந்த
துவளுமகிழ்ச்சியிற்சோர்வு. ... ... 1.

பொச்சாப்புக்கொல்லும்புகழயறிவினய்
நிச்சநிரப்புக்கொன்றுங்கு. ... ... 2.

பொச்சாப்பார்க்கில்லய்புகழ்மயதுவுலகச்
சொச்சநூலோர்க்குந்துணிவு. ... ... 3.

அச்சமுடயார்க்கரணில்லயாங்கில்லய்
நச்சலுடயார்க்குநன்கு. ... ... 4.

என்னுறக்காவாதிழுக்கியான்றன்பிழய்
வென்னுறிரங்கிவிடும். ... ... 5.

வாயினயார்மாட்டுமென்றும்வழுக்காம
யாயினதுவொப்பதில். ... ... 6.

அரியவென்றுகாதவில்லய்பொச்சாவாத்
திருவினற்போற்றிச்செயின். ... ... 7.

புகழ்ந்தவய்போற்றிச்செயல்வேண்டுஞ்செய்யா
திகழ்ந்தார்க்கெழுமயுமில். ... ... 8.

இகழ்ச்சியிற்கெட்டாரயுள்ளுகதாந்த
மகிழ்ச்சியின்மய்ந்துறும்போழ்து. ... ... 9.

வள்ளியதெய்தலெளிதுமன்மற்றுந்தா
முள்ளியதுள்ளப்பெறின். ... ... 10.

(கோளினருக்கு) வேறு வேறுன கோபத்திடத்த தீமயி னுந் தீமயேயாம் சிறப்புற்ற (புகழால்) அசய்கின்ற மகிழ்ச் சியிடத்துச் சோருதல். ... ... 1.

(கோளினருக்கு) மறதியுளதேற் கொன்றுவிடும் (தம் நினய்வாலாய) கீர்த்தியய் அறிவிடத்த நலத்தய் நித்திய வறுமயானது கொன்று கெடுத்தாற்போல. ... ... 2.

(தாம்செய்யவேண்டும் வினய்களில்) மறதி கொள்ளுங் கோளினர்க்கில்லயாம் புகழ்ப்பண்பு அது உலகிலுள்ள தூய் மய் நூலோருக்கும் (ஒத்த) துணிபாம். ... ... 3.

பயம் (இயல்பாய்) உள்ளவருக்கு அரணிருந்தும் (பயன்) இல்லய் அதுபோல் இல்லயாம் (புகழ்வேண்டுமென) நச்சு தலுடய கோளினருக்கு நல்லபயன். ... ... 4.

யாதேனு (மொருதீது) வருதற்கு முன்பே பாதுகாவாது வழுவவிட்ட கோளினன் (மனம்) தன் பிழய்க்குப்பின்பு (தானே) நூறுமடங்கா யிரங்கிவிடும். ... ... 5.

(கோளினர்க்குத்தம்பாற்) பொருந்திய யாவரிடத்து மெக் காலத்தும் (புகழில்) வழுக்காத பண்புளதாகுமிடத்து அப்பண்பயொப்பது (பிறிதொன்றும்) இல்லய். ... 6.

(கோளினர் முடித்தற்கு) அரியனவென்று ஆகாதவ யில் லய் மறவாமயாகிய செல்வ இடத்தாற் பாதுகாத்துப் (புகழுறச்) செய்யுமிடத்து. ... ... 7.

(நூலோராற்) புகழப்பெற்ற வினய்களய்ப் பாதுகாத்துக் (கோளினர்) செய்தல்வேண்டும் செய்யாமலிகழ்ந்துவிட்ட வருக்கு உயர்வுப்பண்பென்றுமில்லய். ... ... 8.

(கோளினர்) இகழ்விடத்திற்கு எட்டாத புகழுடயோ ரய் நினய்க்கக்கடவர் தாம் தம்முடய மகிழ்ச்சியிடத்து வலிமயடயும் பொழுதில். ... ... 9.

(கோளினர்) வளமயுள்ள புகழய் அடய்தல் எளிதாகும் நிலயாகப் பின்புந் தாம் (செய்ய) நினய்ந்ததய் (மறவாமல்) நினய்க்கப் பெறுமிடத்து. ... ... 10.

ஓர்ந்துகண்ணோடாதிறைபுரிந்தியார்மாட்டும்
மார்ந்துசெய்வக்தேமுறை. ... ... 1.

வானோக்கிவாழுமுலகெல்லாமன்னவன்
கோனோக்கிவாழுங்குடி. ... ... 2.

அந்தணர்நூற்குமறத்திற்குமாதியாய்
வந்தமன்னவன்கோல். ... ... 3.

குடிதழீஇக்கோலோச்சுமாநிலமன்ன
னெடுதழீஇநிற்குமுலகு. ... ... 4.

நயமுளிக்கோலோச்சுமன்னவனுட்ட
வியலும்விளையுளுந்தொக்கு. ... ... 5.

வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின். ... ... 6.

இறைக்காக்கும்வையகமெல்லாமவனைய்
முறைக்காக்குமுட்டாச்செயின். ... ... 7.

வண்பதத்தானோராமுறைசெய்யாமன்னவன்
தண்பதத்தாற்றானேகெடும். ... ... 8.

குடிபுறங்காத்தோம்பிக்குற்றங்கடிதல்
விடலன்றுவேந்தன்றொழில். ... ... 9.

கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட்டதனெடுநேர். ... ... 10.

(கோளினர் தத்தமிற்செய்வனவற்றய்) ஆராய்ந்து இடம் பேராமல் தமதிறயிலிருந்து யாவரிடத்தும்(அன்பு)நிறய்ந்து செய்யும் (அந்த) அகத்தழுவலே) முறய்மயாம். ... 1.

(பருவங்களிற்பெய்யும்) மழயய்நோக்கி வாழுமுலகமெல் லாம் (அதுபோற்றழுவல்) மன்னியகோளினனது கோன்ம யய் நோக்கி வாழுங்குடிகள். ... ... 2.

அழகியதண்மயுடய மேலோரது நூலுக்கும் அறத்திற்கி டமான வினய்க்குங் காரணமாகவந்தது (தழுவலில்) மன் னியகோளினனது கோன்மயாம். ... ... 3.

கூடிய இனத்தாரோடு தழுவிக்கோன்மய் செலுத்துகின்ற பெரியநிலத்துமன்னிய கோளினனுடனே (எக்காலத்தும்) தழுவிநிற்கும் உலகமானது. ... ... 4.

(தழுவுதலாலுண்டாகும்) நயத்தய் நினய்ந்து கோன்மய் செலுத்தும் நிலய்பெற்ற கோளினனது நாட்டின்கண்ண வாம் (மழய்) விரிவும் விளய்வும்கலந்து. ... ... 5.

(படய்முகத்தெறியும்) வேலாயுதமன்று வெற்றிதருவது (தழுவல்) மன்னிகோளினன் கோன்மயாகிய அது சிறிதுங் கோணதென்னுமிடத்து (அதுவேதரும்). ... ... 6.

(தமக்குரிமயாய்த்) தங்குமிடத்துக் காக்கப்பெறும் வய்ப் பிடமான உலகமெல்லாம் அக்கோளினனய் முறயாகக் கா வல்செய்யு முட்டுப்பாடின்றிச்செய்யுமிடத்து. ... 7.

வளமயுள்ள இடத்தாலே உள்ளதயாராயாமலும் (தனக் குரிய) முறய்மய்செய்யாமலும் மன்னியகோளினனுக்குத் தண்மயழிவால் (நிலய்) தானேகெட்டொழியும். ... 8.

(தன்னோடு) கூடினோரய்ப் பிறர்வருத்தாமற் பாதுகாத்து யர்த்தி (அவர்பாற்) குற்றங்கண்டாற் றண்டித்தல் விடத்தக் கதன்று விரும்பப்பெறுங்கோளினற்குரியதொழிலாம். 9.

கொலயிடத்த கொடுமயினுங் கொடியாரய் (உலகம்) வி ரும்பப்பெறுங்கோளினன்றண்டித்தல் பசியபயிருக்கு அ லம்வுசெய்புங்களயய் களய்ந்ததனோடொப்பாகும். 10.

அல்லகொண்டாரிற்கொடிதேயலய்மேற்கொண்
மெல்லவய்செய்தொழுகும்வேந்து. ... ... 1.

ஆலயினின்முனிடுவென்றதுபோலு
மேலாதுநின்முனிரவு. ... ... 2.

நாடொறுநாடிமுறய்செய்யாமன்னவ
னொடொறுநாடுகெடும். ... ... 3.

கூழ்ங்குடியுமொருங்கிழக்குங்கோல்கோடி
யாழாதுசெய்யுமரசு. ... ... 4.

அல்லற்பட்டாற்முதழுதகண்ணீரன்றே
செல்வத்தய்த்தேய்க்கும்படய். ... ... 5.

மன்னர்க்குமன்னுதல்செங்கோன்மயக்தின்றேன்
மன்னுவாமன்னர்க்கொளி. ... ... 6.

நளியின்மய்ஞாலத்திற்கெற்றற்றேவேந்த
னெளியின்மய்வாழுமுயிர்க்கு. ... ... 7.

இன்மயினின்னுதுடய்மய்முறய்செய்யாக்
கொன்மயன்கோற்கீழ்ப்படின். ... ... 8.

ஒல்லாதமன்னவன்செய்யினுறய்கோடி
மல்லாதுவானம்பெயல். ... ... 9.

மாவலங்குன்றுமறுதொழிலோர்நூன்மறப்பர்
காவலன்காவானெனின். ... ... 10.

அல்லனவாய தன்மய்களய் மேற்கொண்டாரிடத்த கொடுமையினுங் கொடியதேயாம் அலய்த்தற்றொழிலய் மேற்கொண்டு மெல்வினய்களயாற்றிநடக்குங் கோளினர்விருப்பு. 1.

கரும்பாலயினிடத்து நின்றதலய்வன் (அங்குற்றாரயதில்) இடுவென்று கூறுவதுபோலாம்(ஒளி) பொருந்தாமல் நின்ற கோளினன் (கூடினோர்பாலிரக்கும்) இரப்புரய். ... 2.

நாள்கள்தோறும் நாடுதல்செய்து (ஒளியுறுதற்குரிய) முறய்களய்ச்செய்யாத நிலயுள்ளகோளினனுக்கு நாள்கள்தோறும் நாடுதற்றன்மய்கெட்டுவிடும். ... ... 3.

(கோளினருக்குப்) பொருளும் கூடிவாழுமுறவும் மொருசேர இழந்துபோம் கோன்மய்கோட்டமுற்று அழுந்த நோக்காதுசெய்யுங் தலய்மய்த்தன்மயால். ... ... 4.

(கூடிவாழுமுறவோர்) துன்பப்பட்டு(அவர்கொடுமையய்ச்) சகிக்கமுடியாது அழுதகண்ணீரன்றே (கோளினர்) செல்வத்தய் மெலியச்செய்யும் பாணமாவது. ... ... 5.

நிலய்பெற்ற கோளினர்க்கு நிலய்பெறுதல் செவ்விய கோற்றன்மயாம் (அந்த) அகவொளியில்லயானல் நிலயாவாம் அந்நிலய்க்கோளினர்க்கு ஒளியானது. ... ... 6.

(மழயின்) குளிர்ச்சியின்மயானது உலகிடத்திற்கு எத்தன்மய்த்தோ அத்தன்மய்த்தேயாம் விரும்பப்பெறுங் கோளினன் ஒளியின்மயானது வாழுமுயிர்கட்கு. ... 7.

வறுமயிடத்த துன்பத்தினுந் துன்பமுடய்மயாம் (ஒளியுறும்) முறயய்ச்செய்யாத கொலயப்பண்புடயகோளினன் கோன்மய்க்குக் கீழ்ப்படுமிடத்து. ... ... 8.

(ஒளி) பொருந்தாத வினய்களய் நிலய்பெற்றகோளினன் செய்யுமிடத்து உயர்வுகோணிவளம்பல்காது(மேகம்) மழய் பெய்தலில். ... ... 9.

(தனது) பெரிய வலிமய்குறயும் மற்றய்த்தொழினரும் (தம்) நூலய்மறந்துவிடுவர் காவல்பெற்றகோளினன் (ஒளி பொருந்தக்) காவானென்னுமிடத்து. ... ... 10.

தக்காங்குநாடித்தலய்ச்செல்லாவண்ணத்தான்
மிக்காங்கொறுப்பதுவேந்து. ... ... 1.

நீங்காமய்மெல்லவெறிகநெடிதாக்கம்
வீங்குதல்வேண்டுபவர். ... ... 2.

வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனயி
னெருவந்தமொல்லய்க்கெடும். ... ... 3.

இறய்கடியனென்றுரய்க்குமின்னச்சொல்வேந்த
னுறய்கடுகியொல்லய்க்கெடும். ... ... 4.

பேய்கண்டவின்னமுகத்தான்பெருஞ்செல்வ
மோய்கண்டன்னதுடய்த்து. ... ... 5.

நீடியகண்ணிலனயினெடுஞ்செல்வங்
கேடொன்றியாங்கேகெடும். ... ... 6.

கடுமொழியுங்கய்யிகந்ததண்டமும்வேந்த
னடுமுரண்டேய்க்குமரம். ... ... 7.

வேரூற்றியெண்ணுதவேந்தன்சினத்தாற்றிச்
சீறிற்சிறுகுந்திரு. ... ... 8.

செருவந்தபோழ்திற்சிறய்செய்யாவேந்தன்
வெருவந்துவெய்துகெடும். ... ... 9.

கல்லார்ப்பிணிக்குங்கடிங்கோலதுவல்ல
புல்லாநிலக்குப்பொறய். ... ... 10.

(நாடாளர் தவறுபுரிந்தாரய்த்) தகுந்தபடி ஆராய்ந்து (அவர்பின்பும் அத்தவ) றிடத்துச் செல்லாவகயால் மிகுதிபோற்காட்டி (அள்வாத்) தண்டிப்பதேவிரும்பற்றன்மயாம். 1.

(உறவாயினுர்தவறுகாணினும்) நீங்கிவிடாவண்ணம் இலகுவாகத் தண்டிக்கக்கடவர் நெடிதாகிய ஆக்கமானது (நாடோறும்) அதிகப்படுதலய் வேண்டிய நாடாளர். ... 2.

(நாடாளன்தன்னவர்க்கு) அச்சமுண்டாக்குவனவற்றயே செய்துநடக்கும் வெவ்வியகோற்றன்மயனுயவிடத்து(அவர் நயக்கும்) ஒற்றுமய் விரய்விற்கெட்டுவிடும். ... ... 3.

தங்குமிடத்தோராற் கடுமயானவனென்று சொல்லப்பெறுமின்னுச்சொல்லய்விரும்பும்நாடாளனுக்கு உறய்விடத்து (உள்ளநயப்புங்) குறய்ந்து விரய்விற்கெட்டுவிடும். ... 4.

(நிகழ்பவர் காணுந்தோறும்) பேயய்க்கண்டாற்போலுந் துன்பமுகத்தயுடய நாடளனது பெரிய செல்வத்திற்கு ஓய்வுண்டானுற்போலுந் தன்மயுடயதாம். ... ... 5.

(நாடாளன் நிகழ்வாகிய) நெடுகிய கண்களில்லதவனுகிய விடத்து (அவனது) நெடியசெல்வம் கெடுதலய் அடயந்து (இல்லாத) அப்பொழுதே கெட்டுவிடும். ... ... 6.

(யாவரிடத்துங்)கடுமயானசொல்லுங் குற்றத்தின்மிகுந்த தண்டமுமாகிய விரண்டும்விரும்பும் நாடாளனுக்கு அடுத்த வலியாகிய (உயர்வய்) மெலிக்கும் அரமாகும். ... 7.

(உயர்வுக்கு) வேருவனவற்றய்ச்செய்து (அவ்வுயர்வய்) எண்ணுத விருப்புறும் நாடாளன் (தன்னய்க்) கோபத்துய்த்துச்சீறுமிடத்துக்குறய்வடயும்(அவன்)செல்வம். ... 8.

(பகய்வராற்) போர்வந்த பொழுதின்கண் (தமர்களாகிய) அரண்செய்துவய்க்காத விருப்புறும் நாடாளனது (செல்வம்) வெருவலுற்று வெய்யதாய்க் கெட்டுவிடும். ... 9.

(நாடாளர் விரும்பப்பெறும்வினய்) கற்காதவராய்ப் பற்றிக்கொள்ளுங் கடியகோற்றன்மயான அதுவல்லது பொருந்தாவாம் பூமிக்குத் (தாங்கற்கரிய) சுமய். ... 10.

கண்ணேட்டமென்னுங்கழிபெருங்காரிகய்
உண்மயானுண்டிவ்வுலகு. ... . 1.

உண்ணேட்டத்துள்ளதுலகியல்கிலார்
புண்மய்நிலக்குப்பொறய். ... ... 2.

பண்ணென்னும்பாடற்கியய்பின்றேற்கண்ணென்னுங்
கண்ணேட்டமில்லாதகண். ... ... 3.

திண்ணமுகத்தெவன்செய்யுமளவிஞற்
கண்ணேட்டமில்லாதகண். ... ... 4.

கண்ணிற்கணிகலங்கண்ணேட்டமக்கின்றே
லோண்ணெங்குணரப்படும். ... ... 5.

மண்ணேடியய்ந்தமரத்தனயர்கண்ணேடு
மூண்ணக்கண்ணேடாதவர். ... ... 6.

கண்ணேட்டமில்லவர்கண்ணிலர்கண்ணுடயா
ரெண்ணேட்டமின்மயுமில். ... ... 7.

கருமஞ்சிதயாமற்கண்ணேடவல்லார்க்
குரிமயுடய்த்திவ்வுலகு. ... ... 8.

கறுத்தாற்றும்பண்பினர்கண்ணுங்கண்ணேடிப்
பறித்தாற்றும்பண்பேதலய். ... ... 9.

நாகரியநஞ்சுண்டமய்வர்நயத்தக்க
பாகமுறய்வேண்டுபவர். ... ... 10.

(வேந்தினருக்குக்) குறிப்பின்வழிச் செல்லுதலென்கின்ற (பிற அழகைச் சிறிதெனக்) கழிக்கும் பெரிய அழகுண்மையானல் (நயப்பு) உண்டாகும் இவ்வுலகின்கண். ... 1.

உள்ளத்தய் (உணருங்) கண்திட்டத்தாலுள்ளது உலக இயல்பானது (அந்த) அகநயப்பில்லாத வேந்தினர் சேர்க்கையானது பூமிக்குத் (தாங்கற்கரிய) சுமையாம். ... ... 2.

இசையானது என்னுடையதாம்பாட்டிற்குப் பொருத்தமில்லையானல் (அதுபோல் வேந்தினர்க்கு) கருத்தானது என்னுடையதாம் குறிப்பின்வழிச்செல்லுதலில்லாவிடத்து. ... 3.

(வேந்தினரைப்) கண்கள் திட்பமான முகத்திலிருந்து எவனெனச்செய்யும் (தமக்குரிய) அளவிடத்தால் கட்குறிவழிச்செல்லுதலில்லாத விடத்து. ... ... 4.

(வேந்தினரது) கண்ணிடத்துக்கு அணியும் பணியாவது கட்குறிவழிச் செல்லுதலாம் (அந்த) அகநயப்பில்லையானல் ஒளியுடையராக எவ்விடத்துணரும்படியுண்டாம். ... 5.

மண்ணின் (சாரத்தயுண்டு இடம்பெயராது) பொருந்தி நிற்கும் மரத்தய்நிகர்ப்பர் கருத்தோடுமுட்கொள்ளும்படி கட்குறிவழிச்செல்லாத வேந்தினர். ... ... 6.

கட்குறிவழிச் செல்லுதலில்லாத வேந்தினர் (கண்ணிருந்துங்) கண்ணிலராவார் கண்ணுடையவர் (பிறர்) எண்ணிய வழி (குறிப்பாற்) செல்லுதலின்மையுமில்லய். ... 7.

(நயப்புற்ற) வினய்கள்சிதய்வுபடாமற்கட்குறிவழிச் செல்லுதல் வல்லவேந்தினர்க்கு (எக்காலமும்) உரிமையாகவுடையதாகுமிந்த உலகமானது. ... ... 8.

(ஒரு வினயய் மனதிற் கோபங்கொண்டுசெய்யும்பண்பிடமுடையாரிடத்தும் (வேந்தினர்) கட்குறிவழிச்சென்று (அதற்குச்) சாய்ந்து செய்யும் பண்பேதலய்மையாம். ... 9.

நாவாலே கரிதாகிய நஞ்சையும் உண்டடங்குவார் (தம்மினமாயினரோடு) நயப்புறத்தக்க பாகத்தய் முறய்மையாக வீரும்புகின்ற வேந்தினர். ... ... 10.

ஒற்றுமுரய்சான்றநூலுமிவையிரண்டுங்
கற்றுணர்மன்னவன்கண். ... ... 1.

எல்லார்க்குமெல்லாநிகழ்பவையெஞ்ஞான்றுஞ்
சொல்லறிதல்வேந்தன்றொழில். ... ... 2.

ஒற்றினுனெற்றிப்பொருடெரியாமன்னவன்
கொற்றங்கொளக்கிடந்ததில். ... . 3.

வினய்செய்வார்தஞ்சுற்றம்வேண்டாதாரென்றுங்
கனய்வரயுமாராய்வதொற்று. ... ... 4.

கடாஅவுருவொடுகண்ணஞ்சாதியாண்டு
மடாஅமய்வல்லதேயொற்று. ... ... 5.

அன்பின்படிவத்தராகியிறந்தாராய்த்
துன்செயினுஞ்சோர்விலதொற்று. ... ... 6.

அய்யப்பால்கேட்கவற்றுகியறிந்தவய்
எய்யப்பாடில்லதேயொற்று. ... ... 7.

ஒற்றுறற்றித்தந்தபொருளயுமற்றுமோ
ரொற்றினுலொற்றிக்கொளல். ... ... 8.

ஒற்றுறற்றுணராமயாள்கவுடன்மூவர்ச்
செற்றுக்கதேறப்படும். ... ... 9.

சிறப்பறியவொற்றின்கட்செய்யற்கசெய்யின்
மறுப்படுத்தாகுமறய். ... ... 10.

(தன்னுறவாயினரிடத்து) ஒற்றுமையும் (புகழ்) உரம்நிறய்ந்த ஆராய்வுமாகிய இவையிரண்டும் (நிகழ்வு) கற்றுணர்ந்த நிலையுடைய வேந்தினன் இடத்தனவாம். ... ... 1.

(தமராகிய) (எல்லாருக்கும் எல்லாவிதத்தினலு நிகழுகின்ற வினய்களய் எக்காலத்தும் (அவ்வவரது) சொல்லாலறிதலே வேந்தினனது தொழிலாம். ... ... 2.

ஒற்றுமையிடத்தானல்(நிகழ்வு) பொருந்தச்செய்து (அதற்குரிய) பொருளய்த்தெரியாத நிலையுடைய வேந்தினன் வெற்றி கொள்ளும்படி கிடந்தவினய் (பிறிது) இல்லய். ... 3.

(வேந்தினர்) வினய்களய்ச்செய்பவர் தமது சுற்றத்தார் விரும்புதலில்லாத அயலார் என்றுகிய எல்லாரயும் ஆராய்ந்து (நிகழ்வய்) அறிவது ஒற்றுமய்ப்பண்பாம். ... 4.

(வேந்தினருக்கு) சந்தேகிக்கப்படாத உருவத்தோடு கருத்தஞ்சாமல் எவ்விடத்தும் மடங்குதலின்றி (நிகழ்வால்) வல்லதே ஒற்றுமய்ப்பண்பாம். ... ... 5.

(வேந்தினர்) அன்பிடத்தமய்ந்த வடிவுடையராகி (தம்வரம்பு) கடந்தவராய்த் (தமர்)துன்பஞ் செய்தவிடத்தும்(தமது நிகழ்வு) சோர்தலில்லதே ஒற்றுமய்ப்பண்பாம். ... 6.

(வேந்தினர்) சந்தேகிக்கற்பாலனவாயவினய்களய்க்கேட்கும் வலியுடையதாகி அவ்வாறறிந்தவய்களய் எய்த்துவிடும்படி யில்லாததே ஒற்றுமய்ப்பண்பாம். ... ... 7.

(வேந்தினர்) ஒற்றுமய்ப்பண்பால் (தமர்களோடு) பொருந்தி யீட்டிய பொருள்களயும் வேறுமொரு ஒற்றுமயிடத்தால் (நிகழ்விற்) கொள்ளுதல் வேண்டும். ... ... 8.

(வேந்தினர் தமர்பால் வய்த்த) ஒற்றுமயய் (அவர்) ஒற்றுமயாலுணராவண்ண மாளக்கடவர் (அதனல்) உடனே நீங்குபவரய்வெறுத்து ஒப்பாகத்தெளிய(நிகழ்வு)உண்டாம். 9.

(வேந்தினர் யாதேனும் ஒரு) சிறப்பய்ப் (பிறர்) அறியும்படி ஒற்றுமயிடத்துச்செய்யாதொழிக செய்யுமிடத்துக்குற்றப்படுத்தினலுகும் மறய்வுக்கு. ... ... 10.

உடையெனப்படுவ தூக்கமக்கில்லா
ருடையதுடையரோமற்று. ... ... 1.

உள்ளமுடையமையுடையமைப்பொருளுடையமை
விள்ளாதுநீங்கிவிடும். ... ... 2.

ஒருவவிழந்தேமென்றல்லாவாரூக்கக்
கருவாழுங்கைத்துடையார். ... ... 3.

ஆக்கமதர்வினைச்செல்லுமசைவில்லா
வூக்கமுடையானுழை. ... ... 4.

அள்ளத்தனையமலர்நீட்டமாந்தர்தம்
உள்ளத்தனையதுயர்வு. ... ... 5.

உள்ளுவதெல்லாமுயர்வுள்ளன்மற்றது
தள்ளினுந்தள்ளாமைநீர்த்து. ... ... 6.

ஒட்டிடத்தொல்காருரவோர்புதையம்பிற்
கட்டுப்பாடென்றுங்களிறு. ... ... 7.

உள்ளமிலாதவொய்தாருலகத்துத்
தெள்ளியமென்னுஞ்செருக்கு. ... ... 8.

அரியதுகூர்ங்கோட்டதாயினும்யானைப்
ஓருவம்புலிதாக்குறின். ... ... 9.

உரமொருவற்குள்ளவெறுக்கையத்தில்லார்
விரிமக்களாதலேவேறு. ... ... 10.

(வேந்தினரய் உயர்வு) உடையரென்னும்படி உண்டாவது உள்ளக்கிளர்ச்சியாம் (அந்த) அகத்துயர்வில்லார் உடையதாய பொருளால் உட்யராவாரோ (அதற்கு) வேரும். ... 1.

(வேந்தினருக்கு) உள்ளக்கிளர்ச்சியுடய்மயே (எக்காலத்தும் நீங்காத உயர்வு) உடய்மயாம் பொருளுடய்மயானது (உடய்ாருக்கும்) சொல்லாது (இடயில்) நீங்கிவிடும். 2.

(நமக்குள்ளனவாய பொருள்கள்) நீங்க (அதய்) இழந்தோமென்று மயக்கமுரூர் உள்ளக்கிளர்ச்சிக்கு மூலமாகிய அறிவய் ஆளும்பொருளுடய வேந்தினர். . . ... 3.

(பெறுதற்கரிய) ஆக்கமானது வழிவிசாரித்துச் சென்றடயும் (எவ்வகய் வினயினுஞ்சலித்து) அசய்வுறுத உள்ளக்கிளர்ச்சியுடய வேந்தினன் (தங்கும்) இடத்தய். ... 4.

நெருக்கத்தினளவினவேயாம் (நீரின்கணுள்ள) மலர்களின் (காம்பு) நீட்சி (அதுபோல் வேந்தினராய) மனுடர்க்குத் தமதுள்ளக்கிளர்ச்சியளவாகும் உயர்வு. ... 5.

(வேந்தினர் முயல்வுற்று) நினய்ப்பனவெல்லாம் (ஊக்கமாகிய) உயர்வய் நினய்த்தலாம் பின்பு அப்பண்பு விலக்கிய விடத்தும் விலகாத நீர்மயயுடய்தாம். ... ... 6.

(தமது வினய்கள்) சுருங்கிய விடத்துந் தளரார் (உள்ளே கிளரும்) அறிவுடயவேந்தினர் (உடலிற்பாய்ந்து) புதய்ந்த அம்புகளய்ப்பிடுங்கிப் பெருமய்நாட்டும் யானய் (போல்). 7.

உள்ளக்கிளர்ச்சியில்லாத வேந்தினர் அடயப்பெரூர் உலகின்கண் (வினயால்) தெள்ளியதன்மயுடயோர்மென்று சொல்லும் (உயர்வுக்) களிப்பய். ... ... 8.

(பருமயிற்றன்னயொப்பது) அரியதாய்க் கூர்மயானகொம்புடயதாய விடத்தும் யானயான்று பயந்தோடும் (உள்ளத்துயர்ந்த) புலியாற்முக்கப்பெறுமிடத்து. ... ... 9.

(ஊக்க) அறிவேவேந்தினருருவனுக்கு (என்றும்) உள்ள பொருளாம் (அந்த) அகத்துயர்வில்லாதவர் (உயர்வால்) விரிவுபெற்ற மானுடராகுதலே வேரும். ... ... 10.

வீசினுங்குனமுவிளக்கமடியென்னு
மாசூரமாய்ந்துகெடும். ... ... 1.

மடியய்மடியாவொழுகல்குடியய்
மிடியேகவேண்டுபவர். ... ... 2.

பிடிமடிக்கொண்டொழுகும்பேதய்பிறந்த
முடிமடியுந்தன்னினுமுந்து. ... ... 3.

மாண்டெறுகுற்றம்பெருகுமடிமடிந்
தாண்டவுஞற்றிலவர்க்கு. ... ... 4.

வடிநீர்மறவிமடிதுயினுன்குங்
கடுநீரார்காமக்கலன். ... ... 5.

மாண்புளார்பற்றமய்ந்தக்கண்ணுமடியுடையா
ரேண்பயனெய்தலரிது. ... ... 6.

மாண்டிரிந்தெள்ளுஞ்சொற்கேட்பர்மடிபுரிந்
தாண்டவுஞற்றிலவர். ... ... 7.

தடிமய்குடிமய்க்கட்டங்கிற்றன்னென்னர்
பொடிமய்புகுத்திவிடும். ... ... 8.

குடியாண்மயுள்வந்தகுற்றமொருவன்
மடியாண்மய்மாற்றக்கெடும். ... ... 9.

ஆ அயுஞல்மன்னவனெய்துமடியளந்தாங்
கேளயதெல்லாமொருங்கு. ... ... 10.

சிதறியவிடத்தும் (ஏணினின்றுங்) குறய்வுபடாத (நாடாளரது) விளக்கமானது சோம்பலென்னுங் குற்றம்படர மழுக்கமுற்றுக் கெட்டுவிடும். ... ... 1.

(உள்ளத்துச்) சோம்பலய் மடிதலாகச்செய்து(தம்வினய் வழுவாது) நடத்தல்வேண்டும் கூடிவாழ்தலய்வறுமயானது நீங்கவேண்டும் நாடாளர். ... ... 2.

(தன்னய்ப்) பிடித்தசோம்பலயே (இயல்பாக்) கொண்டு நடக்கு(முயல்)அறிவில்லா நாடாளன்பிறந்த(குடித்)தலய்மயானது ஊடிந்துபோகுந்தன்னிடத்தினு முன்பு. ... 3.

மாட்சிமயய்க் கெடுக்கின்ற குற்றமானது பெருகிவரும் சோம்பலய் மடித்து (தத்தமில்) ஆட்சி கொண்ட(ஏணுல்) முயல்வு செய்தலில்லாத நாடாளருக்கு. ... ... 4.

(எவற்றினும்) வடுக்காணும் நீர்மயும் மறதியும் சோம்பலும் தூக்கமுமாகியநான்கும் (நகுதற்றன்மயய்க்) கடியுமிய ல்புள்ள நாடாளர் விரும்புமணிகளாம். ... ... 5.

மாட்சிமயுடயாரது தொடர்பு அமய்ந்த விடத்துஞ் சோம்பலுடய நாடாளர் (நகுதல்) நிலய்பெற்றபயனய்ப் பெறும்படி கிடய்த்தலரிதாம். ... ... 6.

(தமக்கியல்பாயுள்ள) மாட்சிமயும் வேறுபட்டு(பிறரால்) இகழுஞ் சொல்லய்க் கேட்பார் சோம்பல்செய்து ஆண்ட (அமய்வால்) முயலுதலில்லாத நாடாளர். ... ... 7.

சோம்பற்பண்பானது (நாடாளனமய்வாக்) கூடிவாழ்தலின்கண்தங்குமிடத்துத் தன் பகய்வருக்குச் சிறுமயாக்கி (அவர் சரணத்திற்) செலுத்திவிடும். ... ... 8.

(ஏணுற்) கூடிவாழ்தலயாட்சிசெய்யுமிடத்து உள்ளே உண்டான குற்றமானது ஒரு நாடாளன் சோம்பலினைட்சியய்த் (தன்னில்) நீக்கவே கெட்டுவிடும். ... ... 9.

(ஏணிற்குரிய வினய்களய்) ஆய்ந்து முயறலில் நிலய்த்த நாடாளனயடயும் (அவன்) அடிகளளாவிய அவ்விடங்களிற் பொருந்திய பொருளெல்லாமொன்றுக. ... 10.

அருமையுடைத்தென்றசாவாமைவேண்டு
முருகுமுயற்சிதரும். ... ... 1.

ஓர்ந்துவினைக்கடலோம்பல்வினைக்குறை
தீர்ந்தாரிற்றீர்ந்தன்றுலகு. ... ... 2.

தாளாண்மையென்னுந்தகைமைக்கட்டங்கிற்றே
தேளாண்மையென்னுஞ்செருக்கு. ... ... 3.

மீளாண்மையில்லாதான்வேளாண்மைபேடிகை
கேளாண்மைபோலக்கெடும். ... ... 4.

மென்பால்விழையான்வினைவிழைவான்றன்கேளிர்
துன்பந்துடைத்தூன்றுந்தூண். ... ... 5.

முன்னைத்திருவினையாக்குமுயற்றின்மை
புன்மைபுகுத்திவிடும். ... ... 6.

வாளுளான்மாமுகடியென்பமடியிலான்
சூளுவான்சுமையினுள். ... ... 7.

ஆள்வினையார்க்கும்பழியன்றறிவறிந்
தேள்விடலின்மைபழி. ... ... 8.

மொய்பொருளாகாதெனினுமுயற்சிதன்
கொய்வினையாற்கூலிதரும். ... ... 9.

ஊழையுமுப்பக்கங்காண்பருலைவின்றி
யூழாய்ந்துளுற்றுபவர். ... ... 10.

(வினயிடத்துச்செய்தற்கு) அருமையுடையதென்று (இடையில்) இறப்பவிடாமல் விரும்புமெழுச்சியய் (ஏணினருக்கு) முயல்வப்பண்பே கொடுக்கும். ... ... 1.

(ஏணினர்) ஆராய்ந்து (தமது) வினையய்க்கெடுத்துவிடுதலொழியக்கடவர் (ஏனெனில்) வினையய்க்குறையில்விட்டவரினின்றும் நீங்கியது அப்பொழுதே உலகம். ... 2.

(ஏணினருக்கு) முயற்சியய் ஆட்கொள்ளலென்னும் பெருமையினிடத்துத் தங்கினதேயாம் (தத்தமில்) தெளிந்த ஆட்சித்தன்மையென்னுங் களிப்பு. ... ... 3.

(ஒருவினயக்கூறுபாடுவந்தாலும்) மீளவும்(அதனய்)ஆளுதலில்லாத ஏணினன் விரும்புமாண்மையானது பேடியிடத்துக் கேளாளுந் தன்மய்போற் கெட்டுவிடும். ... 4.

(செய்தற்கு) இலேசான காரியங்களய் விரும்பாயய் (அரிய) வினயகளய் விரும்புமேணினன் தனது கேண்மயரதுன்பங்களய் நீக்கி (அவரய்த்) தாங்குந் தூணவான். 5.

(ஏணினருக்கு) முதன்மயான முயல்வானது செல்வம் வருதற் கிடத்தயுண்டாக்கும் முயலவின்மயானது புல்லிதாகிய வறுமயய்ப் புகுதச்செய்துவிடும். ... ... 6.

(முயல்வாகிய) ஒளியினகணுள்ள ஏணினன் பெருமய் பொருந்தியஉயர்வுடயானென்பது(பெறுவான்)சோம்பலில்லாயய்வினயுடயான்றம்வீட்டிற்பாதியாள்புடயனுவான். 7.

ஆட்சிசெய்யும் வினயுடய்மயானது யாவர்க்கும் பழிப்பன்று (ஏணினருக்கு) அறியவேண்டுவதறிந்து (பிறர்) எள்ளும் வினயகளயொழித்தலின்மயே பழிப்பாம். ... 8.

நெருங்கிய பொருள்களாலே முடிவுபெறுதென்னுமிடத்தும் முயல்வானது தன்னுடய ஆய்வுவினயால் (ஏணினருக்கு அதற்குரிய) கூலியய்க்கொடுக்கும். ... ... 9.

(தம்மய்வெல்லவல்ல) பகயயும் பிற்பக்கங்காண வல்லவராவார் உலய்வில்லாமல் (முயல்வாற்) செய்யவேண்டுவதயாராய்ந்து கடத்துமேணினர். ... ... 10.

நடுக்கண்வருங்கானகுகவதனய்
அடுத்தூர்வதக்தொப்பதில். ... ... 1.

எள்ளத்தனயவிடும்பயறிவுடையார்
உள்ளத்தினுள்ளக்கெடும். .. .. 2.

இடும்பய்க்கிடும்பய்படுப்பரிடும்பய்
படும்பய்படாஅதவர். ... ... 3.

எடுத்தவாயெல்லாம்பகடன்னுனுற்ற
விடுக்கணிடுக்கட்படும். ... ... 4.

அடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். ... ... 5.

ஆம்படர்க்கல்லற்படுபவோபெற்றேமென்
றேம்புதறேற்றுதவர். ... ... 6.

கய்யாமுடம்பிடும்பய்க்கென்றுகலக்கத்தய்
வெய்யதாக்கொள்ளாதாமேல். ... ... 7.

இன்பம்விழயானிடும்பயியல்பென்பான்
என்புமுறுதலிலன். ... ... 8.

துன்பத்துளின்பம்விழயாதான்றுன்பத்து
ளின்பமுறுதலிலன். ... ... 9.

இன்னுமயின்பமெனக்கொளினுகுந்தன்
தென்னுர்விழயுஞ்சிறப்பு. ... ... 10.

(ஏணினர்) நடுங்கத்தக்க துன்பம்வருங்காலத்து மகிழ்வு செய்யக்கடவர் அத்துன்பத்தய் நெருக்கிக் கீழ்ப்படித்துவதில் (அந்த) அகநகுதலையொப்பது (பிறிது) இல்லைப். 1.

(எவ்வளவு . பெரிதாய்வந்தாலும்) எள்ளினளவான துன்பமாக அறிவுடைய ஏணினர் மனத்தின்கண் நினைக்க (அது அவ்வளவுமின்றிக்) கெட்டுவிடும். ... . 2.

(தம்மையடைந்த) துன்பத்துக்கே துன்பத்தய் உண்டாக்குவார் துன்பத்தாலுண்டாகும் வருத்தத்தய் (உள்ளத்துப்) படுதல் பெறுத ஏணினர். ... ... 3.

(தனக்குரிய வினைகளய்) எடுத்தவிடங்களிலெல்லாம் மதயானையய் ஒத்த ஏணினையடைந்த துன்பமே துன்பப்படும். ... ... 4.

(ஒருகாலத்தே ஒன்றன்மேலொன்றுக) அடுத்தடுத்து வந்தாலும் (அத்துன்பத்தால்) அழிவுறுத ஏணினனய் அடைந்த துன்பமே துன்பப்படும். ... ... 5.

(விண்ணிழந்தகாலத்து) உண்டாகுந் துன்பத்திற்கு (மனம்) வருந்துவனவோ (அவ்வினைக் கிடைத்தகாலத்துப்) பெற்றோமென்று பெருமிதந் தெரியாத ஏணினர். ... ... 6.

(எப்பொழுதும் வசிக்கும்) இடமாம் உடம்பானது துன்பத்துக்கென்று துன்பத்தய் வெவ்வியதாககொள்ளாதாம் மேம்பாடுடைய ஏணினர் (மனம்). ... . 7.

இன்பத்தய் (என்றும்) விரும்பாதவனுய்த் (துன்பத்தய் யாவர்க்கும்) இயற்கயென்னுமேணினன் (தன்) எலும்பிலும் (பற்றுப்) பொருந்தலிலனுவான். ... ... 8.

துன்பம் வந்தவிடத்து அதனுள் (நகுதலால்) இன்பத்தய் விரும்பாத ஏணினன் (வினைத்) துன்பத்தினுள் இன்ப மனுபவித்தல் இலனுவான். ... ... 9.

(ஏணினன் வினையால்வரும்) துன்பத்தயே இன்பமென்னும்படி கொள்ளுமிடத்தில் உண்டாகுந் தன்னுடைய பகய்வரும் விரும்பத்தக்க சிறப்பு. ... ... 10.

கருவியுங்காலமுஞ்செய்கயுஞ்செய்யும்
அருவினயுமாண்டதமய்ச்சு. ... ... 1.

கய்ந்தாள்குடிகாத்தல்கற்றறிதலாள்வினயோ
டய்ந்துடன்மாண்டதமய்ச்சு. ... ... 2.

பிரித்தலும்பேணிக்கொளலும்பிரிந்தார்
வருத்தலும்வல்லதமய்ச்சு. ... ... 3.

ஒல்லலுந்தேர்ந்துசெயலுமொருதலயா
மல்லலும்வல்லதமய்ச்சு. ... ... 4.

அறனறிந்தான்றமய்ந்தசொல்லானெஞ்ஞான்றுந்
திறனறிந்தான்றேர்ச்சித்துணய். ... ... 5.

ஆவுளநூலோடுடையார்க்கதிநுட்ப
மூவுளமுன்னிற்பவய். ... ... 6.

உயற்கயறிந்தக்கடய்த்துமுலகச்
செயற்கயறிந்துசெயல். ... ... 7.

உழயுற்றறியானெனினுமுறுதி
குழீயிருந்தான்கூறல்கடன். ... ... 8.

பழுதெண்ணுமந்திரியிற்பக்கத்துத்தெவ்வோ
ருழயதுகோடியுறும். ... ... 9.

முறய்ப்படச்சூழ்ந்துமுடிவிலவேசெய்வ
நிறய்ப்பாடிலாதவர். ... ... 10.

(ஏணினருக்குத் துணைய்க்) கருவியும் (ஏற்ற) காலமும் செய்யுமிடமும் செய்கின்ற அரியவினையுமாகிய இவய்களய் ஆண்டதன்மையே அமய்வாம். ... ... 1.

(ஏணினருக்கு) இடத்தகலாத மூயற்சியும் கூடிநிற்றலுங் காத்தலும் கற்றறிதலும் ஆள்வினயாற்றலுமான அய்ந்துடனும் மாண்புற்றதன்மையே அமய்வாம். ... ... 2.

(வினயால் வேறுபட்டாரய்ப்) பிரித்துவிடுதலும் (வேறுபடாரய்ப்) பேணிக்கொள்ளலும் (ஆற்றலால்) பிரிந்தாரய் வருவித்தலும் வல்லதே (ஏணினருக்கு) அமய்வாம். 3.

(தமர்களோடு) பொருந்தலும் (பயன்படுமாறு) தேர்வுற்றுச்செய்தலும் ஒருதலயாக வளம்படுத்தலுமாகியவல்லதன்மயே (ஏணினருக்கு) அமய்வாம். ... ... 4.

அறஞ்செய்தலயறிந்து (பயன்) விரிந்து அமய்வுபெற்ற சொல்லுடயனுய் எக்காலத்தும் தன்மய்ச்செயலறிந்தஏணினனே (பயன்) தேருதற்குத் துணயாம். ... ... 5.

(அமய்வு) உண்டாகின்ற உள்ளம் ஆராய்வோடுமுடிய ஏணினருக்குச் செய்தற்கரிய நுட்பவினயங்கள் இன்மயே உள்ளனவாம் முன்னிற்பனவாக. ... ... 6.

(ஏணினர் அவ்வவ்விடங்களிற்) செலுத்திச் செய்வனவற்றயறிந்தவிடத்தும் உலகத்தினது செயலியற்கயயறிந்து (அமய்விற்) செய்தல்வேண்டும். ... ... 7.

(ஒருவன்றன்) இடத்தயப்பொருந்தி (அமய்வு) அறியாதென்னுமிடத்தும் (அதற்கு வேண்டும்)உறுதியய்க் கூடியிருந்த ஏணினன் கூறுதல் கடனும். ... ... 8.

(ஏணினர் தமராயினுருக்குப்) பழுதுனயக்கு மந்திரியிடம் (இருப்பதிலும்) அயலிடத்திருக்கும் பகய்வர் தம்மிடத்துடய்மயாவது கோடிபங்கு நலமாம். ... ... 9.

முறய்மயுண்டாக ஆலோசித்தும் முடிவு இல்லாத வினய்களயே செய்வார் இறய்மய்க்குரிய (அமய்வுப்) பெருமயில்லாத ஏணினர். ... ... 10.

நாநலமென்னு நலனுடையமயந்நலம்
ஆநலத்துள்ளதூஉமன்று. ... ... 1.

ஆக்கமுங்கேடுமதனல்வருதலாற்
றாக்கதன்சொல்லின்கட்சோர்வு. ... ... 2.

கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க்கேளாருஞ்
சூட்டமொழிவதாஞ்சொல். ... ... 3.

துறைநாடிச்சொல்லுகசொல்லையறனு
மெறுழுமதனினூங்கில். ... ... 4.

சொல்லுகசொல்லையப்பிறிதோர்சொலச்சொல்லப்
எல்லுஞ்சொலின்மையறிந்து. ... ... 5.

சூட்சிதாஞ்சொல்லிப்பிறர்சொற்பயன்கோடல்
மாட்சியின்மாசற்றார்கோள். ... ... 6.

அகல்சொல்லன்சோர்விலனஞ்சானவனய்
இகல்வெல்லல்யார்க்குமரிது. ... ... 7.

சொல்லுந்தொழில்கேட்குஞாலநிரந்தினிது
வல்லுதல்வல்லார்ப்பெறின். ... ... 8.

வலசொல்லக்காமுறுவர்மன்றமாசற்ற
சிலசொல்லறேற்றூதவர். ... ... 9.

கணமூழ்த்துநாறுமலர்னயர்கற்ற
திணரவிரித்துரயாதார். ... ... 10.

(இயல்முறையவர்க்கு) நாவின் நலமென்கின்ற (சொல்லே) நலஞ்செய்ததலுடையதாம் அதுவல்லாத நலமெல்லாம்(பயன்) ஆகுகின்ற நலத்தின்கணுள்ளதாகவும் வையற்பதன்றும். 1.

(இயல்முறையவர்க்குப் பயன்)ஆகும்வாழ்வும் கெடுதலும் அச்சொல்லால் வருவதாதலாற் சீர்தூக்கிப் பார்க்கக்கடவர் தன்றன்(நாடாண்மைச்)சொல்லிடத்ததவறுகளை. ... 2.

(இயல்முறையவர் தம்பாற்) கேட்டவரையெல்லாம் பற்றிக் கொள்ளும்பயன்றகையுடையனவாய்க் கேளாதவருங் (கேட்புறிற்றலைபிற்) சூட்டும்படி கூறுவதாங் (கோடற்) சொல். 3.

(இயல்முறையவர் கோடலின்)துறையை நாடுதல்செய்துகூற க்கடவர்சொற்களை (பயன்றரும்)அறஞ்செய்தலும்வலியுறு தலும் அதனிடத்தாதலினு மேலாவதில்லையாம். ... 4.

(இயல்முறையவர்) சொல்லக்கடவர்சொற்களை மற்றொரு சொல்லானது அந்தச்சொல்லை(வேந்துப்பயனில்வென்று) விளக்கமுறுஞ் சொல்லின்மையை அறிவற்று. ... ... 5.

(இயல்முறையவர்வேந்திற்குரிய)சூட்சியாகத் தாஞ் சொல் லிப்பிறரது சொற்பயனைக் கொள்ளுதல்(பயனுணரும்) மா ண்பிடத்தாற்குற்றமற்றவர்கொள்கையாம். ... ... 6.

(பயன்) விரிந்த சொல்லினனும் (ஏண்மையிற்) சோர்வில் லானும் (வினைக்கு) அஞ்சாதவனுமாய இயல்முறையனை (உற்ற) வலிவெல்லுதல் யாவர்க்கும் அரிதாம். .... 7.

(இயல்முறையவர்) கூறுந்தொழிலையே கேட்டுநடக்கும் உலகமானது (பயனுணருமறிவு) நிரம்பி(ஏண்மையாய்)இனிம யமாட்டுதலில் வல்லாரைப் பெறுமிடத்து. ... ... 8.

(தம்முள்ளத்து) வல்லனவெல்லாஞ்சொல்லுதற்கு விரு ப்பமடையவர் சபையின்கட் குற்றமற்ற (பயனுள்ள) சொற்கள் சிலவேனுங் கூறத்தெளியாத இயல்முறையவர். ... 9.

கூட்டமாகிய (கொத்தினூடு) மலர்ந்தும் மணமில்லாத மலரோடொப்பாவார் (பயனுறத்) கற்றவினையளைச் செறி வாகப்பகுத்துச் சொல்லாத இயல்முறையவர். ... 10.

வேண்டிற்றியாக்கந்தருஉம்வினைநல
மீண்டியவெல்லாந்தரும். ... ... 1.

ஒன்றுமொருவுதல்வேண்டும்புகழொடு
வென்றிபயவாவினை. ... ... 2.

ஓதல்வேண்டுமொளிமாழ்குஞ்செய்வினை
ஆதுமென்னுமவர். ... ... 3.

இடுக்கட்படினுமிளிவந்தசெய்யார்
கடுப்பற்றகாட்சியவர். ... ... 4.

எற்றென்றிரங்குவசெய்யற்கசெய்வானேற்
றெற்றன்னசெய்யாமைநன்று. ... ... 5.

அன்றேபசிகாண்பாஞ்யினுஞ்செய்யற்க
வென்றோற்பழிக்கும்வினை. ... ... 6.

அழிமலைந்தெய்தியவாக்கத்திற்சான்றோர்
சழிநல்குரவேதலை. ... ... 7.

கடிந்தகடிந்தொராரார்செய்தார்க்கவைதாந்
தடிந்தாலும்பீழைதரும். ... ... 8.

எற்பறித்தவெல்லாமழப்போமிழப்பினும்
அற்பிறக்காம்நற்பாலவை. ... ... 9.

அலத்தாற்பொருள்செய்தேமார்த்தல்பசுமட்
பிலத்துணீர்பெய்திரீஇயற்று. ... ... 10.

(அறத்தோர்க்கு) வேண்டுகின்ற இறய்முறய் ஆக்கத்தய்த் தருவதாகியவினய்நலமானது (இருமய்க்கண்ணும்) பொருந்திய எல்லா நலங்களயுங்கொடுக்கும். ... ... 1.

(அறத்தோர் தாணுகவேவந்து) பொருந்துவ வாணுலும் ஒழித்துவிடுதல் வேண்டும் (இறய்மய்க்குரிய) கீர்த்தியோடு வெற்றியய்க் கொடாத தொழில்களய். ... ... 2.

(எக்காலத்தும்) ஒழித்துவிடுதல் வேண்டும் (தமது) விளக்கத்தய்க்கெடுக்குஞ்செய்தொழிலய் மேலாவோமென்னும் (இறய்முறய்வராய) வீரூளர். ... ... 3.

(சகித்தற்கரிய பெருந்) துன்பத்த யடய்ந்த விடத்தும் (வீரூண்மய்க்கு) இளிவுவருவன செய்யார் (மனக்) கடிப்பற்றகாட்சியறமூடயவர். ... ... 4.

(இறய்முறய்வனுயகேளாளன்) எத்தன்மயதென்றிரங்குவனசெய்யாதொழிக (முன்) செய்தாணுயினும் (பின்) தெளிந்து அப்படிபட்டவய் செய்யாமய்நன்றும். ... ... 5.

(இறய்முறய்வன்)அப்பொழுதே (முன்னறியாத) பசியய்க் காண்பானுயவிடத்துஞ் செய்யாதொழிக (கேளாண்மயில்) வெற்றிகொண்டோர் இகழும் வினய்களய். ... ... 6.

(பிறருக்குக்) கெடுதற்றொழிலய்ச்செய்து அதனுல் அடய்ந்தஆக்கவிடத்தினும் நிறய்வுற்ற(இறய்முறய்வராய)போற்றூளருக்கு வருத்தும் வறுமயிடமே தலய்மயாம். ... 7.

(மேலோர் ஆகாவெனக்) கடிந்துவிட்ட வினய்களய் (தாமுங்) கடிந்துவிடாது செய்தபோற்றூளருக்கு அவ்வினய்கள் தாமே (பின்பு) நீக்கிணுலுந் துன்பங்கொடுக்கும். 8.

(அறத்தோர்பிறர்) விளக்கங்(கெடப்) பறித்தபொருளெல்லாம் (தாம்) அழும்படி போம் இழந்தவிடத்தும்அன்புள்ள இறய்வருக்குளவாகும் நன்மயால் வந்தபொருள்கள். .. 9.

(அறத்தோர்) சஞ்சலவினயாற்பொருள்வரச்செய்துஇன்பம் நிறய்த்துக்கொள்ளுதலானது பசியமண்விடரினிடத்து நீர்ப்பெய்து நிறய்த்துவய்க்குந் தன்மய்த்தாம். ... 10.

மற்றேமென்பதொருவன்மனத்திட்பம்
பிற்றயவெல்லாம்பிற. ... ... 1.

ஊழெறாலுற்றபிணெல்காமயிவ்விரண்டி
ஞறென்பராய்ந்தவர்கோள். ... ... 2.

ஏற்றுவாச்செய்தக்கதாண்மயிடய்க்கொட்கிற்
றற்றுவிழுமந்தரும். ... ... 3.

எல்லுதல்யார்க்குமெளியவரியவாஞ்
செல்லியவண்ணஞ்செயல். ... ... 4.

வீறெய்திமாண்டார்வினயத்திட்பம்வேந்தன்க
ணூறெய்தியுள்ளப்படும். ... ... 5.

எண்ணியவெண்ணியாங்கெய்துபவெண்ணியா
ரண்ணியராகப்பெறின். ... ... 6.

விச்சயமெய்யெள்ளாமய்வேண்டுழுருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னருடய்த்து. ... ... 7.

தூங்காதுகண்டவினயக்கட்டளங்காது
தீங்குகடிந்துசெயல். ... ... 8.

துன்பமுறவரினுஞ்செய்கதுணிவாற்றிப்
பன்பண்பயக்கும்வினய். ... ... 9.

ஏண்டிட்பமெய்தியக்கண்ணும்வினயத்திட்பம்
வேண்டாரய்வேண்டாதுலகு. ... ... 10.

(இம்மய்க்கன்றி) மறுமய்க்கும் இன்பம்பயக்குமென்பது (இறய்முறய்வனுய) ஒருவனுக்கு மனத்திட்பமாம் வெறு திட்பமெல்லாம் திட்பம்வன வல்லவாம். ... ... 1.

(தமக்கே) ஊறுபாடாகும் வினய்களயொழித்து விடுத லும் (செய்து ஊறுபாடு) வந்தபின்றளராமயுமான இவ்விர ண்டிடவ்வழியென்பார் ஆராய்ந்தஇறய்முறய்வர்கொள்கய். 2.

(இறய்முறய்வர் பிறர்) இடருவண்ணஞ் செய்யத்தக்கதே ஆண்மயாம் இடயிற்றடுமாறு மிடத்து (வீங்குதலில்) தடய் படாத் துன்பத்தய்க் கொடுக்கும். ... ... 3.

(நல்லோர் போற்சொல்வால்) விளங்கல் யாவர்க்கும் எளியனவாம் அரியனவாம் (வீங்குதற்றன்மய்) நிகழும்படி யான விதமாக (இறய்முறய்வர்) செய்குதல். ... 4.

வீருண்மயடய்ந்து மாண்புற்ற இறய்முறய்வரது வினய்த் திண்மயானது (தூய்தால்) விரும்பப்பெறுவோனிடத்து ஊ றுதலுண்டாகி நினய்க்கவே (பயன்) உண்டாம். ... 5.

(தமதுளத்தில்) எண்ணிய பயனெல்லாம் எண்ணியப டியே அடய்வனவாம் அவ்வெண்ணமுற்ற இறய்முறய்வர் (தூய்து) பொருந்தினோராகப் பெறுமிடத்து. ... 6.

(உருவாற்சிறிதாய்)அறிவாற்(பெரிதான)உடம்புப் (இறய் முறய்வர்எதுவால்)இகழாமய்வேண்டும் உருளுகின்ற பெரி யதேருக்கு அச்சாணிபோல்வாரயுமுடயது உகம். ... 7.

(இறய்முறய்வர்) தாமதஞ்செய்யாது தாங்கண்ட வினயி னிடத்து மனங்கலங்காமல்(ஏதுவால்)தீமய்ச்செயல்களய்க் கடிந்து செய்தல்வேண்டும். ... ... 8.

(இறய்முறய்வன் முன்பு) துன்பம் பொருந்த வந்தவிடத் துஞ் செய்யக்கடவன் துணிவுசெய்து (யாவரும்) புகழத் தக்கதருதி பயக்கும் வினய்களய். ... ... 9.

நிலய்மயான (வேறு) திண்மய்கள் அடய்ந்த விடத்தும் (வீருண்மய்க்குரிய) வினய்த்திண்மய் விரும்பாத இறய்மு றய்வரய் விரும்பியேற்காது உல்கமானது. ... ... 10.

சூழ்ச்சிமுடிவுதுணிவெய்தலத்துணிவு
தாழ்ச்சியுட்டங்குதறீது. ... ... 1.

தூங்குகதூங்கிச்செயற்பாலதூங்கற்க
வீங்குதல்செய்யும்வினய். ... ... 2.

ஒல்லும்வாயெல்லாம்வினய்நன்றேயொல்லாக்காற்
செல்லும்வாய்நோக்கிச்செயல். ... ... 3.

ஏய்வ்ச்சமென்றிரண்டினைச்சினையுங்காற்
றீயெச்சம்போலத்தெறும். ... ... 4.

அருள்கருவிகாலம்வினயிடனோடய்ந்து
மிருடீரவெண்ணிச்செயல். ... ... 5.

முடிவுமிடபூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். ... ... 6.

தெள்ளியசெய்வான்செயன்முறயவ்வின
யுள்ளறிவானுள்ளங்கொளல். ... ... 7.

கோலல்வினயாக்கிக்கோடனனய்கவுள
யானயால்யானயாத்தற்று. ... ... 8.

நட்டார்க்குநல்லசெயலின்விரய்ந்ததே
ஓட்டாரயொட்டிக்கொளல். ... ... 9.

கொள்ளுவாருண்ணடுங்கலஞ்சிக்குறய்பெறிற்
பிள்ளுபெரியார்ப்பணிந்து. ... ... 10.

(வீரூளருக்கு) ஆராய்தலின் முடிவாவது (வீங்கு) வினயிற் றுணிவுறுதலாம் அவ்வாறு துணிதலிற் முழ்வின் கண்ணராய்த்தாமதஞ் செய்தல் தீங்காம். ... ... 1.

(வீரூளர்) தாமதஞ்செய்க தாமதமாகச்செய்யும் பகுப்புடய வினய்களய்த் தாமதஞ்செய்யாது புரிக (வீறு) மிகுதலய்ச்செய்யும் வினய்களய். ... ... 2.

(வீரூளருக்கு உரய்) பொருந்து மிடமெல்லாம் வினய் நன்மயேயாம் (அது) பொருந்தாதபொழுது செல்லுமிடம் பார்த்துச் செய்தல்வேண்டும். ... ... 3.

(வீரூளருக்கு உரய்) பொருந்தலும் (வினய்கோடற்கு) அஞ்சுதலுமென்று கூறுமிரண்டிடத்துமுள்ள குறயானது (விறகிற்பற்றிய) தீக்குறயப்போற் கெடுக்கும். ... 4.

இரக்கமும் சாதனமும் பொழுதும் தொழிலும் இடமுடயாஞ்மெனுமாகிய அய்ந்தும் (வீரூளர்) மயக்கமறக் கருதிக் (கெழுவுதல்) செயல்வேண்டும். ... ... 5.

(வீரூளர் எடுத்த வினயின்) முடிவும் இடயில்வரு மூறபாடும் முடிந்தவிடத்துக்கிடய்க்கும் மிகுபயனும் பார்த்துக் (கெழுவுதல்) செயல்வேண்டும். ... ... 6.

தெள்ளிதாகிய வினய்களய்ச்செய்யும் வீரூளன் செய்தற்குறிய மூறயாவது அவ்வினய்களி னுளப்பாட்டய்க்குறிப்பாலறிவானய் உள்ளத்துக்கொள்ளுதலாம். ... ... 7.

(வீரூளர்குறிப்புள்ள) தலய்வனுல் எடுத்தவினயய் முடித்துக்கொள்ளுதல் (மதத்தால்) நனய்ந்த கபோலமுடய யானயால் யானயய்க்கட்டுந் தன்மய்த்தாம். ... ... 8.

(வீரூளர்) சிநேகமாயிருருக்கு நல்ல வினய்களய்ச் செய்தலிடத்தும் விரய்ந்ததேயாம் (கேடுவிளய்க்கும்) பகய்வரய் அடுத்து (உறவு) கொள்ளுதல். ... ... 9.

(வீரூளர் தமதுரிமயய்க்) கய்க்கொள்ளுவார் (பின்) மனம் நடுங்குதற்குப்பயந்து (யாதேனுங்) குறய்வுவந்தவிடத்து வேறுபுட்ட பெரியோரய் வணங்கி. ... ... 10.

அன்புடையமையான்றகுடிப்பிறத்தல்வேந்தவாந்
துன்புடையமைதூதுரைப்பான்பண்பு. ... 1.

அன்பறிவாராய்ந்தசொல்வன்மைதூதுரைப்பார்
முன்பூறமையாதமூன்று. ... ... 2.

நூலாருணூல்வல்லனுகுதல்வேலாருள்
வேலின்வினையுரைப்பான்பண்பு. ... ... 3.

அறிவுருவாராய்ந்தகல்வியிம்மூன்றின்
செறிவுடையான்செல்கவினைக்கு. ... ... 4.

நன்சொல்லித்தூவாதநீக்கிநகச்சொல்லித்
துன்சீர்பயப்பதாந்தூது. ... ... 5.

கற்றுக்கண்ணஞ்சான்செலச்சொல்லிக்காலத்தாற்
றுற்றதறிவதாந்தூது. ... ... 6.

எண்ணறிந்துகாலங்கருதியிடனறிந்
தொண்ணியுரைப்பான்றலை. ... ... 7.

தூய்மைதுணைமைதுணிவுடையமையிம்மூன்றின்
வாய்மைவழியுரைப்பான்பண்பு. ... ... 8.

வேய்மாற்றம்வேந்தர்க்குரைப்பான்வடுமாற்றம்
வாய்சோராவன்கணவன். ... ... 9.

இறுதிபயப்பினுமெஞ்சாதிறைவன்
றிறுதல்பயப்பதாந்தூது. ... ... 10.

அன்புடய்மயும் (அவ்வன்பில்) அகன்ற குடிகளய் வேறுபடுத்தலும் விரும்பற்றன்மயய் அவாவும் வருத்தமுடய்மயும் தூதர்க்கு(வினய்)உரய்க்கும் வீங்கினன் பண்பாம். 1.

அன்பும் அறிவும் ஆராய்ந்து கூறும் சொல்வலிமயும் தூதர்பால் (வினய்)உரய்க்கும் வீங்கினரது முதன்மய்க்கிடயூறுபடாத மூக்குணங்களாம். ... ... 2.

(வினய்) நூலுணர்ந்தோருள் (அந்த) நூலில் வல்லவனுகுதல் வேலய்செய்யுந் தூதருள் அவ்வேலயிடத்த தொழிலயுரய்க்கும் வீங்கினனது பண்பாம். ... ... 3.

(வருவனவுணரும்) அறிவும் (குறய்வில்லாத) வடிவமும் ஆராய்ந்து கற்றகலவியுமாகிய இம்மூன்றிடத்த செறிவுடய வீங்கினன் செல்லக்கடவன் (உரய்) வினய்க்கு. ... 4.

(வீங்கினன்) நன்மயய்ச் சொல்லித் தூய்மயல்லனவற்றய் ஒழித்து மகிழும்படிபேசி (அவ்வுரயாற்) பொருந்திய சீர்மய் பயப்பது நன்றும் தூதன்கண். ... ... 5.

(வீங்கினன் உபாயங்) கற்று கருத்தஞ்சாதவனுய்க் (கேட்பொருட்) செல்லக்கூறிக் காலத்தாலே பொருந்திய உரயய் அறிவது நன்றும் தூதன்கண். ... ... 6.

(தூதரது) எண்ணத்தயறிந்து காலத்தயும் ஆராய்ந்து (உரிய)இடத்தானயுணர்ந்து(இவற்றோடு) பொருந்தித் (தூதர்பால்) உரய்க்கும் வீங்கினனே தலய்வனும். ... 7.

தூயதன்மயும் துணயாதற்றன்மயும் துணிவுடய்மயுமாகிய இம்மூன்றிடத்தும் வாய்மயாகவுடய்மயே (தூதர்) வழியுரய்க்கும் வீங்கினற்குப் பண்பாம். ... ... 8.

(கேட்போர்) சூடிக்கொள்ளும் வார்த்தயய் விரும்பும் தூதர்க்கு உரய்ப்பவனுவான் குற்றமுள்ள வார்த்தய்களய் வாய்சோர்ந்துங் கூறுத வலிய வீங்கினன். ... ... 9.

கேடு தருவதாயவிடத்தும் குறய்வுபடாது இறய்மய்பூண்ட வீங்கினன் (உரயாற்) பொருந்துதலய்ப் பயப்பது நன்றும் (வினய்கூறுந்) தூதன்கண். ... ... 10.

அகலாதணுகாதுதீக்காய்வார்போல்க
திகழ்வேந்தர்ச்சேர்ந்தொழுகுவார். ... ... 1.

மன்னர்விழைபவிழையாமைமன்னராற்
றன்னியலாக்கந்தரும். ... ... 2.

போற்றினரியவைபோற்றல்கடித்தபி
ணற்றுதல்யார்க்குமரிது. ... ... 3.

நான்றசொலுஞ்சேர்ந்தநகையுமவித்தொழுக
லான்றபெரியாரகத்து. ... ... 4.

தொட்டபொருளோரார்தொடரார்மற்றபொருளைக
கிட்டக்காற்கேட்கமறை. ... ... 5.

வேண்டுபக்காலங்கருதிவெறுப்பில
தூண்டுபவேட்பச்சொலல். ... ... 6.

வேட்பனசொல்லிவினையிலவெஞ்ஞான்றுஞ்
சூட்பினுஞ்சொல்லாவிடல். ... ... 7.

இளையினமுறையொன்றிகழார்நின்ற
ஒளியோடொழுகப்படும். ... ... 8.

கொளப்பட்டேமென்றெண்ணிக்கொளாதசெய்யார்
களிப்பற்றகாட்சியவர். ... ... 9.

பழையமெனக்கருதிப்பண்பல்லசெய்யுங்
கெழுதகைமைக்கேடுதரும். ... ... 10.

(மிக) நீங்காமலும் (மிக) நெருங்காமலுமிருந்து தீயினிடத்துக் குளிர்காய்பவரய் ஒக்கக்கடவர் விளங்குகின்ற விருப்புறுவோரய்ச் சேர்ந்துநடக்கும் வீங்கினர். ... 1.

(வீங்கினருக்குத் தம்பால்) மன்னினேர் விரும்புவனவற்றய் விரும்பாமயானது அம்மன்னினேராலே தானுகவே யியலுகின்ற ஆக்கத்தய்க்கொடுக்கும். ... ... 2.

(வீங்கினர் மன்னினேரய்ப்) பாதுகாக்குமிடத்து அரிய செயல்களப்ப் பாதுகாத்தல்வேண்டும் (அவர்மனம்) கொதித்தபின்பு தணித்தல் யாவர்க்குமரிதாம் (ஆதலால்). 3.

(வீங்கினர்) அசய்வுற்ற சொல்லும் சேர்ந்து சிரிக்குஞ் சிரிப்பும் ஒழித்து நடத்தல்வேண்டும் (அறிவால்) விரிந்த பெரியோரிடத்து. ... ... 4.

(வீங்கினர் தம்பான்மன்னினேர்) தொடர்ந்தபொருளய் ஆராயாராயுந் தொடராராயுமிருந்துபின்புஅந்தப்பொருள் கிடய்க்குங்காலத்துக் கேட்கக்கடவர் மறய்வாக. ... 5.

(வீங்கினர்) விரும்புவனவற்றிற்குரிய காலத்தயாராய்ந்து (கெழுமியோர்க்கு) வெறுப்பில்லனவாக உயர்த்துவனவற்றய் (அவர்) விரும்ப்ச்சொல்லுதல் வேண்டும். ... 6.

(வீங்கினர் கெழுமியோர்) விரும்புவனவற்றய்க்கூறி வினயில்லாதனவற்றய் எக்காலத்தும் சூட்சிசெய்யுமிடத்தும் சொல்லாது விடல்வேண்டும். ... ... 7.

(வீங்கினர் தம்பான்மன்னினேரய்) இளயசொன்றும் உறவின் முறயசொன்றும் இகழாராய் (அவரிடத்து) நின்ற விளக்கத்தோடு நடக்கவே (கெழுவல்) உண்டாம். ... 8.

(பலராலும் எற்றுக்) கொள்ளப்பட்டோமென்று நினய்ந்து (அவருக்கு) ஏற்காத செயல்களய்ச்செய்யார் மயக்கமற்ற தோற்றமுடய வீங்கினர். ... ... 9.

(வீங்கினர் நாம்) பழமயோமென்று நினய்ந்து நற்குணமல்லாதனவற்றய்ச் செய்யுங் கலத்தற்றன்மயானது (அவராண்மய்க்குக்) கேட்டய்க்கொடுக்கும். ... ... 10.

கூறுமைந்நோக்கிக்குறிப்பறிவானெஞ்ஞான்று
மாறுநீர்வையக்கணி. ... ... 1.

அய்யப்படாஅதகத்ததுணர்வானய்
உய்யுணர்வோடொப்பக்கொளல். ... ... 2.

ஓதாக்குறிப்புணர்வாரயுறுப்பினுட்
கோதுகொடுத்துங்கொளல். ... ... 3.

குறித்ததுகூறுமைக்கொள்வாரோடேனைய்
வெறுப்போரனையரால்வேறு. ... ... 4.

உன்னுகுறிப்புணராவாயினுறுப்பினுட்
பன்னுபயத்தவோகண். ... ... 5.

படித்ததுகாட்டும்பளிங்கேபோனெஞ்சங்
கடித்ததுகாட்டுமுகம். ... ... 6.

முகத்தின்முதுக்குறப்ந்ததுண்டோவுவப்பி
னுகக்கினுந்தான்முந்துறும். ... ... 7.

அற்றநோர்நிற்கவமையுமகநோக்கி
யுற்றதுணர்வார்ப்பெறின். ... ... 8.

கனமார்கேண்மையுங்கண்ணுரய்க்குங்கண்ணி
னுகவையுணர்வார்ப்பெறின். ... ... 9.

கண்ணியமென்பாரளக்குங்கோல்காணுங்கா
லெண்ணல்லதில்லய்பிற. ... ... 10.

(பிறரொன்றய்ச்) சொல்லாமயிருக்கவும்(தான்)பார்த்துக் குறிப்பாலதனயறியும் வீங்கினன் எக்காலத்தும் நீங்காத நீர் மயுடய வய்ப்பிடத்துக்கு அணியாம். ... ... 1.

(வீங்கினர்) சந்தேகப்படாது(தமது) உள்ளத்து நினய்ந்த தய்க் (குறிப்பால்) உணர்பவனய்த் (தம்மய்) உய்ப்பதாகிய உணர்ச்சியோடு ஒப்பக்கொள்ளுதல்வேண்டும். ... 2.

(வீங்கினர் செய்வனவற்றய்ச்) சொல்லாதிருக்கவும் குறி ப்பாலுணர்ந்து கொள்பவரய்த் (தமது) அங்கங்களுளொன் றய்க் குறய்த்துக்கொடுத்துங் கொள்ளுதல்வேண்டும். 3.

(தம்பாலாயினோர் மனத்திற்)குறித்ததய்ச்சொல்லாமயிரு க்கவும் அறிந்துகொள்ளும் வீங்கினரோடு மற்றயவெறுப் பினர் (உருவொக்கினும்) அவர் தன்மயால் வேறும். 4.

(தம்பான்மன்னினோர்) நினய்க்குங் குறிப்புக்களய் உண ராதனவாயவிடத்து (வீங்கினரது) அங்கங்களுள் (சிறந்த தாகக்) கூறும்பயனுளவோ கண்கள். ... ... 5.

(தன்னிடத்துப்)படித்துள்ளபொருளய்ப்(பிறருக்குத் தெ ளிவாகக்) காட்டும் பளிங்கேபோல் (ஒருவர்) நெஞ்சங்கடிப் புற்றதய்க்காட்டும் (அவர்) முகம். ... ... 6.

முகமாகிய விடத்தினும் அறிவிற்கு உறய்விடம் வேறுண் டுண்டோ மகிழ்ச்சியால் உவப்புறுமிடத்தும் (வருத்தத் தால் வெறுப்புறுமிடத்தும்) தான் முந்துற்றுணர்த்தும். 7.

(வீங்கினர்) சமயம்பார்த்து (அவர்) நேராகநிற்க (அது வே) போதும் உள்ளத்தய்ப்பார்த்துப் பொருந்திய நிகழ்வய் அறிந்துகொள்வோரய்ப் பெறுமிடத்து. ... ... 8.

(வீங்கினருக்கு) உயர்வுபொருந்திய கேண்மயயும் (பகய் மயயும்) கண்களேகூறும் கண்ணிடத்துள்ள சந்தோசத்தய் உணர்ந்துகொள்வோரய்ப் பெறுமிடத்து. ... ... 9.

பெருமயுடயோமென்னும் வீங்கினர் (பிறருள்ளத்தய்) அளக்குங்கோலாவது ஆராய்ந்துபார்க்குமிடத்து எண்ணி யறியுமறிவேயல்லது இல்லய் மற்றய. ... ... 10.

அவயறிந்தாராய்ந்துசொல்லுகசொல்லின்
சுவயறிந்ததூய்மையவர். ... ... 1.

தொடப்தெரிந்துநன்குணர்ந்துசொல்லுகசொல்லி
னடய்தெரிந்தநன்மையவர். ... ... 2.

தொகயறியார்சொல்லன்மேற்கொள்பவர்சொல்லின்
வகயறிவார்வல்லதூஉமில். ... ... 3.

மேன்சார்பிலெள்ளியராதல்வெளியார்முன்
வான்சுதய்வண்ணங்கொளல். ... ... 4.

நன்றென்றவற்றுள்ளுநன்றேழுதுவருட்
சென்றுகிளவாச்செறிவு. ... ... 5.

ஆற்றினிலய்தளர்ந்தற்றேவியன்புல
மேற்றுணர்வார்முன்னரிழுக்கு. ... ... 6.

கற்றறிந்தார்கல்விவிளங்குங்கசடற
வற்றறிதல்வல்லாரகத்து. ... ... 7.

ஓத்தாய்வுடையார்முற்சொல்லல்வளர்வத
னுத்தியுணீர்சொரிந்தற்று. ... ... 8.

நன்கிலார்பொச்சாந்துஞ்சொல்லற்கநல்லவயுட்
டென்குசெலச்சொல்லுவார். ... ... 9.

அங்கணத்துளுக்கவமிழ்தற்றுற்றங்கணத்த
கொங்கணுக்கோட்டிகொளல். ... ... 10.

(திரண்ட) சபயயறிந்து (இதனு லிதுவருமென) ஆராய்ந்து (ஓருரய்) சொல்லக்கடவர் சொல்லிடத்துள்ள (பொருட்) சுவயறிவுற்ற தூய்மயுடய வீரூளர். ... 1.

(முன்னும் பின்னுமூள்ள) தொடர்புகள் தெரிந்து (உரய்த்தலில் வரும்பயனய்) நன்ரூகவுணர்ந்து சொல்லக்கடவர் சொல்லிட்த்துள்ள நட்ய்தெரிந்த நல்லவீரூளர். 2.

தொகுதியாகிய சபயய் அறியாதவராய் (ஒன்று) சொல்லுதலய் மேற்கொள்ளும் வீரூளர் சொல்லிடத்த கூறுபாடறியாரீரவர் (அவர்) வல்லவினயுமில்லய். ... 3.

(வீரூளர்) மேனமய்சார்ந்த சபயினிடத்து ஒள்ளறிவுடயாதல்வேண்டும் வெள்ளறிவுடயார் முன்பு வெள்ளிய சுண்ணவண்ணங்கொள்ளுதல் வேண்டும். ... 4.

(வீரூளருக்கு) நன்றென்றுரய்த்த வளங்கள் பலவுள்ளும் (சிறந்த) நன்மயேயாம் முதியோர்கூட்டத்துட்சென்று (மூன்பாகப்) பேசாத அடக்கம். ... ... 5.

(ஒருவன்முனிற்குந்) துறயினிடத்து நிலய்மய்தளர்வுற்ற அத்தன்மய்த்தேயாம் (வீரூளர்) விரிந்த அறிவாலேற்றுணர்பவராய மூன்னேர்கண் (வளத்து) இழுக்குறுதல். 6.

(வினய்நூல்) கற்று அறிந்தவரது கல்வியானது விள்க்கமுறுங் குற்றமறும்படி வலிய (அரணுதலய்) அறிதலில் வலலவீரூளரிடத்து. ... ... 7.

(அரணுடய வீரூளர்வினய்) முறய்களய் ஆய்வுடயார் முன்பு (ஒன்று) கூறுதல் வளரும்பயிரது (நீர்) நிறய்க்கும் வரம்புள் நீரய்ச்சொரிந்த அத்தன்மய்த்தாம். ... 8.

தூய்தில்லார்பால் மறந்துஞ் சொல்லாதொழிக தூய்துடயார் சபயினுள் அழகுடயதாகச் செல்லும்படி சொல்லும் வீரூளர். ... ... 9.

(கழிநீர்நிறய்ந்த) அங்கணத்தினுள் சிந்திய அமிழ்தத்தின்றன்மய்த்தாம் (வீரூளர்) தமக்குரிய கூட்டத்தார் வாசமில்லாத சபயய் (இடமாகக்) கொள்ளுதல். ... 10.

வகையறிந்துவல்லவய்வாய்சோரார்சொல்லின்
முகையறிந்தமுய்மையவர். ... ... 1.

கற்றருட்கற்றொனப்படுவர்கற்றர்முற்
றெற்றசெலச்சொல்லுவார். ... ... 2.

அவியகத்துச்சாவாமொழியரரிய
ரவையகத்தஞ்சாதவர். ... ... 3.

சிக்கர்முற்கற்றசெலச்சொல்லித்தாங்கற்ற
மிக்காருண்மிக்ககொளல். ... ... 4.

ஆற்றினளவறிந்துகற்கவவையஞ்சாக்
கூற்றங்கொடுத்தற்பொருட்டு. ... ... 5.

நுண்படையேன்வன்கண்ணரல்லார்க்குநூலோடென்
அண்புடையஞ்சுபவர்க்கு. ... ... 6.

அஞ்சகத்துப்பேடிகையொள்வாளவையகத்
தஞ்சுமவன்கற்றநூல். ... ... 7.

பல்லவைகற்றும்பயமிலரேநல்லவையுட்
சில்லசெலச்சொல்லாதார். ... ... 8.

கல்லாதவரிற்கடையென்பகற்றறிந்து
மல்லாரவையஞ்சுவார். ... ... 9.

கற்றிடனுமில்லாரோடொப்பர்களனஞ்சித்
தெற்றசெலச்சொல்லாதார். ... ... 10.

(ஆண்மயின்) பாகுபாடறிந்து வலியசபய் (கூடும்) இட மாதற்குத்தவறூர் (தக்கோர்கூறுஞ்) சொல்லிடத்த (பொருட்) தொகுதியறிந்த தூய்தினர். ... ... 1.

(ஆட்சிமுறய்களய்ச்)கற்றவர்களு ளெல்லாங் கற்றவரென்று சொல்லப்படுவார் கல்வியாளர் முன்பு தெளிவுள்ளன வாய்ச் செல்லும்படி கூறுந்தூய்தினர். ... 2.

மீடிகின்ற போர்க்களத்திற் சாகின்றவரு மெளியராவார் அரியராவார் சபய் (கூடுமிடமாதற்கு) உள்ளத்து அச்சங் கொள்ளாத தூய்தினர். ... ... 3.

(தூய்தினர்) கடய்படாத கல்வியாளர்முன்புகற்றன்வெல்லாஞ் செல்லும்படி கூறித் தாங்கற்றவய்களின் மேற்பட்டாருள் மேலாயவற்றய்க் கொள்ளுதல்வேண்டும். ... 4.

(தூய்தினர் தமக்குரிய) வழியின்கண் (நின்று) அளவறிந்து கற்கக்கடவர் (அக்கலவியர்) சபயாதற்கஞ்சாத மொழிகளய் (விடயாகக்) கொடுக்கும் நிமித்தம். ... ... 5.

கூர்மய்பொருந்திய ஆயுதமென்ன (பயனய்ச்செய்யும்) வன்கண்மயல்லாதவருக்கு (அதுபோல்) நூலோடாய்தலாலென்னுஞ்(சபய்)பொருந்துமிடத்தஞ்சுந்தூய்தினருக்கு. 6.

அச்சந்தரும் போர்க்களத்தில் பேடியானவன் கய்யிலிருக்கும் ஒள்ளியவாளோடொப்பாகும் சபய் (கூடுமிடமாதற்கு) உள்ளத்திலஞ்சுந் தூய்தினன்கற்ற நூலானது. ... 7.

பலபல நூல்களய்க் கற்றும் பயனில்லாதவரோ யாவார் நல்லோர் சபயினுள் சிலசிலவாகச்செல்லும்படி சொல்லாததூய்தினர். ... ... 8.

கல்லாதவரிடத்துள்ள கடய்க்குண மென்பனவாம் (நூல்) கற்று அறிந்திருந்தும் (பயன்) அல்லாராய்ச் சபயாதற்கு அஞ்சுகின்ற தூய்தினர். ... ... 9.

(நூல்) கற்றவிடத்தும் (அக்கல்வி) இல்லாதவரோடு ஒப்பாவார் சபயுடயுதற்கஞ்சித் தெளிவாகிய சொற்களய்ச் செல்லும்படி சொல்லாத தூய்தினர். ... ... 10.

தள்ளாவிளையுளுந்தக்காருந்தாழ்விலாத்
தெள்ளோருஞ்சேர்வதுநாடு. ... ... 1.

ஆற்றிஞற்பெட்டக்கதாகியருங்கேட்டால்
வீற்றவிளய்வதுநாடு. ... ... 2.

இறையொருங்குமேல்வருங்காற்முங்கியிறய்வர்
நிறையொருங்குநேர்வதுநாடு. ... ... 3.

சேராமையோவாப்பிணியுஞ்செறுபகயு
மீராதியல்வதுநாடு. ... ... 4.

பல்குழுவும்பாழ்செய்யுமுட்பகயும்வேந்தலய்க்கு
மெல்குறும்புமில்லதுநாடு. ... . 5.

கேடறியாகெட்டவிடத்தும்வளங்குன்மு
நாடென்பநாட்டிற்றலய். ... ... 6.

வல்லுரனும்வாய்ந்தமலயும்வருபுனலும்
நல்லரணும்நாட்டிற்குறுப்பு. ... ... 7.

திணயுண்மய்செல்வம்விளய்வின்பமேம
டணியென்பநாட்டிற்கிவ்வய்ந்து. ... ... 8.

நாடென்பநாடாவளத்தனநாடல்ல
நாடவளந்தருநாடு. ... ... 9.

ஏந்தமய்வெய்தியக்கண்ணும்பயமின்றே
வேந்தமய்வில்லாதநாடு. ... ... 10.

(தூய்தினருக்குத்) தள்ளப்படாத விளய்வுகளய் நினய்ந் துணருந் தகுதியுடயோரும் தாழ்வில்லாத தெள்ளியோரும் (நாடுதற்குச்) சேருமதுவே (வளம்) நாடுதலாம். ... 1.

ஆற்றுமிடத்தால் (யாவரும்) விரும்பத்தக்கதாகி அருகிய கேட்டால் (தம்பாலுள்ளார்) மகிழும்படி உண்டாகுமதுவே (தூய்தினருக்குரிய) நர்டுதலாம். ... ... 2.

(நாம் செய்யத்தக்க) கடமய்கள் ஒன்றுக மேற்பட்டு வருங் காலத்துங் (தளராது) தாங்கி இறய்மயுற்ற தூய்தினருக்குரிய நிறய்வு ஒருமயாக நேருமதுவே நாடுதலாம். ... 3.

(தூய்தினருக்குச்) சேராப்பண்பாகியஒழியாதநோய்யும் வருத்துகின்றபகய்மயும் (தம்பால்வந்து) ஊடறுத்துச்செல்லாது நிகழுமதுவே நாடுதலாம். ... ... 4.

(தம்மில் வேறுபட்ட) பலகூட்டமும் கேடுசெய்யு முட்பகயும் விருப்பத்திற்கலய்வுசெய்யு மிழிகுறும்புகளுங் (தூய்தினர் நாட்டத்து) இல்லாத அதுவே நாடுதலாம். ... 5.

(தூய்தினருக்கு எஞ்ஞான்றுங்) கெடுதலறியாதனவாய் (ஒருகாற்) கெட்டவிடத்தும் வளங்குறயாதனவாய நாடுதலென்பனவே நாடுதல்களுட்டலய்மயாம். ... ... 6.

(பகய்வரய் வெல்ல) வல்ல வலிமயும்பொருந்திய வளமும் வருவதயுணரும் யூகமும் நல்ல அறஞ்செய்தலும் (தூய்தினரது) நாடுதற்றன்மய்க்கு அங்கங்களாம். ... 7.

ஒழுக்கமும் சத்தியமும் செல்வமும் உண்டாவதாய இன்பமும் பாதுகாப்பும் அணியென்பனவாம் (தூய்தினரது) நாடுதற் றன்மய்க்கு இவ்வய்ந்தும். ... ... 8.

(தூய்தினருக்குரிய) நாடுதற் பண்பென்பனவாம் (பிறர்) காணவொண்ணுத பயன்வளமுடையவய் நாடுதற் பண்பல்லவாம் (பிறர்) காணும்படி வளந்தரும் நர்டுதல். ... 9.

தாங்குகின்ற பல அமய்வுகள் பொருந்தியவிடத்தும் பயனுறு தன்மயில்லயேயாம் விரும்புந் தன்மய் அமய்ந்துவிளங்காத (தூய்தினரது) நாடுதல். ... ... 10.

ஆற்றுபவர்க்குமரண்பொருளஞ்சித்தற்
போற்றுபவர்கும்பொருள். ... ... 1.

ஆடுறலுமண்ணுமலையுமணிநிழ
லோடுமுடையதரண். ... ... 2.

அமைவகலந்திண்மையருமையிந்நான்கி
னிமைவரணென்றுரைக்குநூல். ... ... 3.

ஊக்கமன்பேரிடத்ததாகியுறுபகை
ஆக்கமழிப்பதரண். ... ... 4.

கொலைக்கரிதாய்க்கொண்டகூழ்த்தாகியகத்தார்
நிலைக்கெளிதாநீரதரண். ... ... 5.

எல்லாப்பொருளுமுடைத்தாயிடத்துதவு
மொல்லாள்புடையதரண். ... ... 6.

முற்றியுமுற்றுதெறிந்துமறப்படைத்தும்
அற்றலரியதரண். ... ... 7.

முற்றுற்றிமுற்றியவரையும்பற்றுற்றி
வெற்றியார்வெல்வதரண். ... ... 8.

வீறெய்திமாற்றலர்சாயவினைமுகத்து
மாறெய்திமாண்டதரண். ... ... 9.

வெல்லாட்சித்தாகியக்கண்ணும்வினைமாட்சி
இல்லார்கணில்லதரண். .. .. 10.

(ஏவிய்வினையய்ச்) செய்பவருக்கும் (தூய்தினரது) காவலேபொருளாம் அச்சமுற்றுத் தன்னைப்பேணுதல் செய்பவருக்கும் (அதுவே) பொருளாம். ... ... 1.

ஆட்சிபொருந்தலும் (அணைவாரோடு) அணைந்து நிற்றலும் வளமுறுதலும் அணிந்தசாந்தத்தோடுமுடியதே (தூய்தினருக்குரிய) காவற்றன்மையாம். ... ... 2.

(தமரோடு) அமைவும் (புத்தி) விரிவும் (மனத்) திட்பமும் அருமையக்குணமுமாகிய இந்நான்கிடத்த விளக்கமே (தூய்தினருக்குக்) காவற்றன்மையென்றுகூறும் நூல்கள். 3.

உள்ளக்கிளர்ச்சி தங்குகின்ற பெரிய இடமுடையதாகிப் பொருந்தும் பகைவரது ஆக்கத்தையழித்துவிடுவதே (தூய்தினருக்குரிய) காவற்றன்மையாம். ... ... 4.

(பிறராற்) கொல்லுதற்கரியதாய் (உறவு) கொண்ட குழாத்தையுடையதாகித் (தன்) உள்ளிடத்தாரது நிலையைக்கு எளிதாகும்நீர்மையுடையதே (தூய்தினரது) காவற்றன்மையாம். 5.

எல்லாப்பொருள்களுந் (தன்) இடத்துடையதாய் (உற்ற) இடத்தில் உதவுதல் செய்யும் பொருந்திய ஆட்சியுடையதே (தூய்தினருக்குரிய) காவற்றன்மையாம். ... ... 6.

(உரிய வினைகளை) முடித்தும் (பிறவினைகளை) முற்றுந் தொழித்தும் இரகசியங்களையுட்கொண்டும் அறுதலரியதே (தூய்தினரது) காவற்றன்மையாம். ... ... 7.

(வேண்டுவவெல்லாம்) முடிவுசெய்து (அவ்வாறு) முடிவுசெய்தோராயுந் தொடர்புசெய்து வெற்றிகுறித்த பகையரை வெல்வதே (தூய்தினரது) காவற்றன்மையாம். ... 8.

பெருமையடைந்து மாறுபாடுடைய யாவரும் பின்வாங்கியோடவினையாற்றுமிடத்து மாறுபட்டு மாட்சிமையுற்றதே (தூய்தினருக்குரிய) காவற்றன்மையாம். ... ... 9.

(பகைவரை) வெல்லும் ஆட்சியுடையதாகியவிடத்தும் வினையாற்று மாண்பு இல்லாதாரைத்(தன்)இடத்து இல்லாமையுடையதே (தூய்தினருக்குரிய) காவற்றன்மையாம். ... ... 10.

பொருளல்லவரய்ப்பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லய்பொருள். ... ... 1.

இல்லாரயெல்லாருமெள்ளுவர்செல்வரய்ச்
செல்லாருஞ்செய்வர்சிறப்பு. ... ... 2.

எண்ணணிப்பொய்யாவிளக்கமிருளறுக்குந்
திண்ணியதேயத்துச்சென்று. ... ... 3.

ஏதீனுமின்பமுமீனுந்திறனறிந்து
வாதின்றிவந்தபொருள். ... ... 4.

புல்லியவன்பொடுவாராப்பொருளாக்கம்
புல்லார்புரளவிடல். ... ... 5.

உறுபொருளுமுல்குபொருளுந்தன்னெஞ்ஞர்ப்
பொறிபொருளும்வேந்தன்பொருள். ... 6.

புல்பரிவன்மீன்குழவிபொருளென்னுஞ்
செல்வச்செவிலியாலுண்டு. ... ... 7.

தண்டுடனெய்ப்போர்கண்டற்றுற்றன்கய்த்தொன்
மிண்டடறச்செய்வான்வினய். ... ... 8.

செய்கபொருளய்ச்செருநர்செருக்கறுக்கு
மெய்வதனிற்கூரியதில். ... ... 9.

ஏனிதிகாழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு
ளேனயிரண்டுமொருங்கு. ... ... 10.

(வீரூளருக்குப்) பொருட்டன்மயல்லாதவரயும்பொருட் டன்மயுடயராகச் செய்யும் (காழ்ப்புறும்) பொருளே யல் லது இல்லயாம் (வேறு) பொருள். ... ... 1.

வறியாரய் எல்லோரு மிகழுவார் (காழ்த்தபொருட்) செல்வமுடய வீரூளரய்ப் பகய்வரும்(உள்ள மஞ்சிச்) செய் வார் மேன்மய். ... ... 2.

(வீரூளருக்கு) எண்ணத்தயுடய அணிகொண்ட படயா கிய கெடாத விளக்கானது (பகயாகிய)இருளய்அறுத்து விடுங் கிட்பமான பிறதேயத்தும் போய். ... ... 3.

(வீரூளர் பகய்வெல்லுதற்கு) ஏதுவயுங்கொடுக்கும் இன் பத்தயுங்கொடுக்கும்(அடயுங்) தன்மயறிந்து வாதித்தலின்றி வந்ததாகிய (படய்ப்) பொருள். ... ... 4.

(மறம்) பொருந்திய அன்போடு வராதபொருளாக்கத் தய் (வீரூளர்) பொருந்தாராய்ப் புரளும்படிவிட்டு விடுதல் வேண்டும். ... ... 5.

(மறமாக) உற்றபொருளும் வரிப்பொருளும் தன்னுடய பகய்வரய் வென்றுகொண்ட பொருளும் விரும்பப் பெறும் வீரூளனுக்குரிய பொருளாம். ... ... 6.

(வீரூளருக்குப்) பொருந்திய இன்பமாகிய அன்பாற் பெறப்பட்ட பிள்ளயானது பொருளென்றுகூறும் செல்வ முள்ள வளர்க்குந்தாய் (பயில்வால்) உண்டாம். .... 7.

(ஒருவன்) தண்டாயுதத்துடனின்று யானயினது போ ரப்க்காணுமத்தன்மய்த்தாதலாம் தன்னிடம் பழமயானபிழ யறச் செய்யும் வீரூளனது தொழில். ... ... 8.

(வீரூளர் காழ்ப்புறும்படி) செய்துகொள்ளக்கடவர் பொ ருள்களய்ப் பகய்வரதுசெருக்கயறுத்தெறியும் ஆயுதமதனி டத்த கூரினுங் கூரியதில்லய். ... ... 9.

பொருந்துவதாய பொருளய் முதிரும்படி செய்துகொண் ட வீரூளருக்கு எளிய பொருள்களாம் ஏனய பொருள்க ளிரண்டு மொன்றுய். ... ... 10.

உறுப்பமைந்தூறஞ்சாவெல்படைவேந்த
னிறுக்கையுளெல்லாந்தலை. ... ... 1.

வல்படையூறஞ்சாவன்கண்டொலைவிடத்
தல்படைக்கல்லாலரிது. ... ... 2.

ஓகையாலென்னுமுவரியெலிப்பகை
கேகமுயிர்ப்பக்கெடுமை. ... ... 3.

வன்கண்ணறைபோகாதாகிவழிவந்த
பன்கண்ணதுவேபடை. ... ... 4.

கூற்றுடன்றுமேல்வரினுங்கூடியெதிர்நிற்கு
மாற்றலதுவேபடை. ... ... 5.

மறமானமாண்டவழிச்செலவுதேற்றம்
பறைநான்கேயேமம்படைக்கு. ... ... 6.

தார்தாங்கிச்செல்வதுதானைதலைவந்த
ஆர்தாங்குந்தன்மையறிந்து. ... ... 7.

அடற்றகையுமாற்றலுமில்லெனினுந்தானை
படைத்தகையாற்பாடுபெறும். ... ... 8.

தொல்லையுஞ்செல்லாத்துனியும்வறுமையும்
வில்லாயின்வெல்லும்படை. ... ... 9.

உலைமக்கள்சாலவுடைத்தெனினுந்தானை
எலைமக்களில்வழியில். ... ... 10.

அங்கங்களமய்ந்து இடையூறுகட்குப் பயப்படாத வெற்றியுடையபடையே விரும்பப் பெறுங்காழ்ப்பினனது நிலையுள்ள எல்லாவற்றினுந் தலையமையுடையதாம். ... ... 1.

(பகைவரொத்த) வலிய ஆயுதங்களாற்படுமூறுபாட்டிற்கு அஞ்சாதவன்கண்மையானது ஒழிவுவந்தவிடத்தும் பின்னிடாத(காழ்ப்பினர்)படைக்கல்லது (பிறர்க்கு) அரிதாம். 2.

(காழ்ப்பினருக்குப் படையின்றி) உவகையாலென்னபயனுண்டாகும் எலிகளின்பகையானபாம்பு மயிலானது மூச்செறியவே கெட்டொழியும். ... ... 3.

(காழ்ப்பினருக்கு) வன்கண்மையானது அற்றுப்போகாததாகி வழிவழியாக வந்ததென்று (யாவருமெடுத்துச்) சொல்லுமிடமுடையதே படையாம். ... ... 4.

(யாவரையுங்கொல்லுமியல்புடைய) மரணமே கோபங்கொண்டு மேற்பட்டுவந்தவிடத்தும் (தம்மிற்) கூடி எதிர்த்துநிற்கும் வலிமையுடையதே (காழ்ப்பினரது) படையாம். ... 5.

வீரமும் மானமும் (தம்மினமாயினோர்சென்று) இறந்தவழியிற்செல்லுதலும் தெளிவும் என்றுகூறும் நான்குகுணமுமே காவலாம் (காழ்ப்பினரது) படைக்கு. ... 6.

(காழ்ப்பினரது) ஒழுங்கையத்தாங்கிச் செல்லுமதுவே ஆயுதமுற்ற (படையாம் தமது) இடத்துவந்த நிறையெல்லாந்தாங்கிக்கொள்ளுந் தன்மையறிவற்று. ... ... 7.

கொல்லுந்தகுதியும் வலிமையுமில்லையென்ற விடத்தும் ஆயுதமானது (காழ்ப்பினரது) படைத்தகுதியாலே (பகைவரைவெல்ல வல்ல) பெருமைபெறும். ... ... 8.

(காழ்ப்பினருக்குத்) துன்பமும் (முன்னோர்சென்றவழிச்) செல்லாதவருத்தமும் தரித்திரமும் விளங்காதொழிந்தவிடத்து வெற்றியுறும் படையானது. ... ... 9.

(பகைவரை) உலைத்துவிடு மாந்தரை மிகவுடையதாயிற்றென்னுமிடத்தும் (அவர்)ஆயுதமானது விளங்குந்தலைமையுள்ள காழ்ப்பினரில்லாவிடத்து இன்மையாம். ... 10.

பன்னலென்னில்லன்மின்றெவ்விர்பலனென்னய்
கன்னின்றுகன்னின்றவர். ... ... 1.

அழுத்திமுயலெய்தவம்பினில்யானய்க்
கிழய்த்தவேலேந்தலினிது. ... ... 2.

சாராண்மயென்பதறுகணென்றுற்றக்கா
லேராண்மய்மற்றதனெக்கு. ... ... 3.

கய்வேல்களிற்றெடுபோக்கிவருபவன்
நய்வேல்பறியாநகும். ... ... 4.

ஆட்டுகண்வேல்கொண்டெறியவழித்திமய்ப்பின்
வாட்டன்றேவன்கணவர்க்கு. ... ... 5.

வய்க்கூன்படாதநாளெல்லாம்வழுக்கினுள்
நய்க்குந்தன்னுளையெடித்து. ... ... 6.

விழயுமிசய்வேண்டிவேண்டாவுயிரார்
கழல்யாப்புக்காரிகய்நீர்த்து. ... ... 7.

இறினுயிரஞ்சாமறவரிறய்வன்
குறினுஞ்சீர்குன்றலிலர். ... ... 8.

இழய்த்ததிகவாமய்ச்சாவாரயாரோ
உழய்த்ததொறுக்கிற்பவர். ... ... 9.

நிரந்தார்கண்ணீர்மல்கச்சாகிற்பிற்சாக்கா
ரெந்தனிற்றக்கதுடய்த்து. ... ... 10.

(காழ்ப்பினர் மறமின்றிப்) பேசலாற் பயனென்னய் நிலையினிற்கக்கடவர்(பகையவர்முன் நின்ற)பலருமென்பயனுற்றுரென்றுற்கன்னின்றுபிரித்த கல்லுருவாய் நின்றார். ... 1.

(உடலில்) அழுந்தச்செய்து முயல்களாய் எய்துகொன்ற அம்புகளையேந்துதலிடத்த (மறத்தினுங் காழ்ப்பினர்) யானையெய்து பிழைப்பட்ட அம்பத்தாங்குதல் நன்றும். ... 2.

(காழ்ப்பினருக்குச்) சார்ந்த ஆண்மையென்பனவாகக் கூறுவது மறமுடையமையாம் ஒருகுறையுற்ற காலத்தும் (தமது) அழகய் விடாதாள்வதே பின்பு அதற்கு மேற்படுதலாம். 3.

(காழ்ப்பினருக்குரிய மறத்தன்மையானது) தன்கய் ஆயுதத்தய் (எதிர்ந்த) யானய்மேலெறிந்துவிட்டு மேல்வரும் பகய்வனது நய்க்கும் வேலய்ப்பிடுங்கிச் சிரிக்கும். ... 4.

இமய்க்கின்ற கண்களிடத்துப் (பகய்வர்) வேலாயுதங் கொண்டெறிய (அதனால்) அழித்திமய்க்கு மிடத்துவாட்டமல்லவோ மறமுடைய காழ்ப்பினருக்கு. ... ... 5.

(மறமுடையகாழ்பினர் மனம்)கூர்மையோடும் வளய்ந்த ஆயுதங்கள்படாத நாட்களையெல்லாம் வழுக்கிடத்தனவாக உள்ளே வருந்துந் தன்னுளய் எடுத்தெண்ணி. ... ... 6.

(யாவரும்) விரும்புங் கீர்த்தியய்வேண்டிவிரும்பாத வுயிருடைய காழ்ப்பினர் கழல்யாத்திருத்தலே (மறமுடய்மய்க்கு) அழகாம் பண்புடையது. ... ... 7.

(தமக்காயுதமுலிய) அற்றவிடத்தும் உயிர்குறித்தஞ்சாத வீரமுடைய காழ்ப்பினர் (தமது) இறுக்கய் வலிமய்குறய்ந்தவிடத்துஞ் சிறப்புக்குறய்தலிலராவார். ... ... 8.

(தாம்) விதித்துக்கொண்ட முறய்கடவாமற் (பகய்வர் மேற்சென்று) சாகுமறமுடைய காழ்ப்பினராய் எவரோவருத்தமெடுத்துக்கொண்டு அதய்த்தடுக்கவல்லவர்.... ... 9.

(காழ்ப்பினருக்கு) கிரம்பிநின்றுரொல்லாங் கண்களில் நீர் சொரியும்படி (மறத்தாற்)சாகும்வலிமய்கிடய்த்தால் அச்சாவேலிமயிற்றகுதியுடயதாம். ... ... 10.

நயற்கரியயாவுளநட்பினதுபோ
லியற்கரியயாவுளகாப்பு. ... ... 1.

நின்னீரநீரவர்கேண்மையிறையமதிப்
பின்னீரபேதையார்நட்பு. ... ... 2.

பண்புடையினாயம்போலும்பயிறெறு
மண்புடையாளர்தொடர்பு. ... ... 3.

மேற்செல்பொருட்டன்றுநட்டன்மிகுதிக்கண்
ஏற்சென்றிடித்தற்பொருட்டு. ... ... 4.

வெட்பம்பழகுதல்வேண்டாவுணர்ச்சிதான்
றட்பாங்கிழமையதரும். ... ... 5.

நெகநகநட்பதுநட்பன்றுநெஞ்சம்
நகநகநட்பதுநட்பு. ... ... 6.

அல்லவையீக்கியாறுய்த்தழிவின்க
ணெல்லலுழப்பதாநட்பு. ... ... 7.

இடையக்கணிழந்தவன்கையபோலவாங்கே
நடுக்கங்களையுவதாநட்பு. ... ... 8.

எல்லையின்வீற்றிருக்கயாதெனிற்கொட்பின்றி
யொல்லும்வாயூன்றுநிலை. ... ... 9.

இனையரிவரொக்கின்னம்யாமென்று
புனையினும்புல்லென்னுநட்பு. ... ... 10.

நலமுள்ள காழ்ப்பினனுக்கு அருமயுடயனவாக எவயிருக்கின்றனநட்பிடத்தினும் அதுபோலும் (தான்பயிலும்) இயல்பிற்கு அரியன எவயுள்ளன காவலாக. ... ... 1.

(என்றுமாறுது) நிற்கும் பண்பினவாகும் (பயிறற்) குணமுடய காழ்ப்பினர்கேண்மய் பிறயானிறய்ந்த சந்திரனது பிற்பக்கப்பண்பினவாம் அறிவிலார் கேண்மய். ... 2.

(ஆழ்ந்தபொருட்) பண்புடய நூலய்க் (கற்குந்தோறு மூண்டாகும்) நயத்தய்ப்போலுமாம் பழகுந்தோறும் பொருந்திய சார்புடய காழ்ப்பினர் தொடர்பானது. ... 3.

(காழ்ப்பினரிணையினுரோடு) மேலாகச் செல்லுதற்பொருட்டன்று (பயில்வு) நாட்டுதல் (அவர்வரய்) மிஞ்சியவிடத்து என்று சென்றிடித்துப் புத்திகூறற்பொருட்டேயாம்.4.

(காழ்ப்பினருக்கு) வெவ்வய செயல்களிற் பயிலுதலய் விரும்பாத வுணர்ச்சியானது (யாவரிடத்தும்) தானுகவே சாந்தமாகிய வரிமயய்க்கொடுக்கும். ... ... 5.

(அகப்பற்று) நெகிழும்படி (புறத்து) மகிழ நண்புகொள்வது (காழ்ப்பினருக்கு) நண்பன்று நெஞ்சமானது விளக்கமுற்று மகிழும்படி பயில்வதே நண்பாம். ... ... 6.

(இனமாயினருக்கு) அல்லாத பண்புகளயொழித்து (உரிய) வழியிற்செலுத்தி(அவருக்கு)அழிவுவந்தவிடத்துத் (தாமும்)ஒன்றுய்வருந்துவதாங்(காழ்ப்பினர் பயிலும்)நண்பு. 7.

இடயின்கணுள்ள(ஆடயய்)இழந்தவனது கய்களுதவுதல் போல (உற்றூர்க் கூறுபாடுவந்த) அப்போதே பயத்தய் நீக்குவதாகும் (காழ்ப்பினர்பயிலும்) நண்பு. ... ... 8.

(காழ்ப்பினர் பயில்வாகிய) அளவிடத்து வீற்றிருப்பது எதுவென்னுமிடத்து (யாவரோடும்) சுழற்சியின்றிப் பொருந்துமிடமெல்லாம் ஒன்றுய் நிற்கும் நிலயாம். ... 9.

(காழ்ப்பினர் இனமாயினரய்) இப்படிப்பட்டவரிவர் எமக்கு இப்படியுடயோம் நாமென்றுபுனய்ந்து கூறுமிடத்தும் புல்லிதெனவொழியும் (அவர்பயிலும்) நண்பு. ... 10.

நாடாதுநட்டலிற்கேடில்லைநட்டபின்
நாடில்லைநட்பாள்பவர்க்கு. ... ... 1.

கோள்வீறுகொள்ளாதான்கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும். ... ... 2.

குணனுங்குடிமையுங்குற்றமுங்குன்றி
னெணனுமறிந்தியாக்கநட்பு. ... ... 3.

படுப்பிற்றந்துதன்கட்பழிநாணுவானைக்
கொடுத்துங்கொளல்வேண்டுநட்பு. ... ... 4.

வல்லசொற்றல்லதிடித்துவழக்கறிய
நல்லார்நட்பாய்ந்துகொளல். ... ... 5.

கேட்டினுமுண்டோருறுதிகிளைஞரைக்
கூட்டியளப்பதோர்கோல். ... ... 6.

பேண்மையதென்பதொருவற்குப்பேதையார்
வீண்மையோரீவிடல். ... ... 7.

செல்லற்கவுள்ளஞ்சிறுகுவகொள்ளற்க
வல்லற்கணூற்றறுப்பார்நட்பு. ... ... 8.

அள்ளிடர்கய்விடுவார்கேண்மையடுங்காலை
உள்ளினுமுள்ளஞ்சுடும். ... ... 9.

மருவுகமாசற்றார்கேண்மையொன்றீத்து
மொருவுகவொப்பிலார்நட்பு. ... ... 10.

(பயனய்) ஆராயாது நண்புசெய்தலிடத்த கேட்டினும் பெரியகேடில்லய் நண்புசெய்தபின்பு ஆராய்ந்து பார்க்கும் பண்பில்லய் நண்பாளுமிறய்மூறய்வர்க்கு. ... ... 1.

இறய்மூறய்வன் (தனக்குரிய) பெருமயய்க் கொள்ளாதவ ணோடு செய்த கேண்மயானது கடய்மூறயாகத்தானே சாகு ம்படியான துன்பத்தய்க்கொடுக்கும். ... ... 2.

(இறய்மூறய்வன் வீங்குதற்குரிய) குணமுடயானிடத்துங் குடியிடத்துங் குற்றத்திடத்தும் குறய்வுபடாத எண்ணமுட யானிடத்தும் (பயனய்) அறிந்துசெய்க நண்பு. ... 3.

(வீங்குதற்றன்மயிற்) கூர்மய்பிறந்து தன்னிடத்து (உண் டாம்) பழிக்கு நாணுவானய் (இறய்மூறயவன் அவன்விரும் பியது) கொடுத்துங் கொள்ளல்வேண்டும் நண்பாக. ... 4.

(இறய்மூறய்வன்) வல்லசொற்களய்ச் சொல்லி (தூயது) அல்லாததய்த்தடுத்து வழக்கங்களய் அறியத்தக்க நல்லவ ரது நட்பயாராய்ந்து (பயனை) கொள்ளுதல்வேண்டும். 5.

(இறய்மூறய்வனுக்குக்)கேட்டிடத்தும் உண்டாகவேண்டு மோர்நுணுதித்(தூய்மய்) இளயாயினுரய் ஒன்றுக்கிப் பயனுள விலவென்பதய்) அளப்பதாய வொருகோன்மய். ... 6.

பேணத்தக்க தன்மயதென்பது (காழ்ப்புற்ற) ஓரிறய்மூறய் வற்கு (பயனுணராத) அறிவில்லாரது வீண்பண்பயொழி த்து விடுதலாம். ... ... 7.

(காழ்ப்புற்ற இறய்மூறய்வன்) செல்லாதொழிக (தனது) உள்ளம் (பயனுறுச்) சிறியனவற்றில் கொள்ளாதொழிக துன்புற்றவிடத்துக்கய்வினய்விடுபவரது நண்பய். ... 8.

(இறய்மூறய்வன்) நெருங்கிய துன்பம் வந்தவிடத்துக் கய் விடுவாரது கேளாந்தன்மயய்ச் (கூற்றுற்) கொல்லுங்காலம் நினய்த்தவிடத்தும் அவ்வுள்ளத்தய்ச் சுட்டுவிடும். ... 9.

(இறய்மூறய்வன்) பொருந்தக்கடவன் (பயனற்) குற்ற மற்றவரது கேண்மயய் (விரும்பிய) ஒன்றய்க்கொடுத்தும் நீக்கக்கடவன் (அதய்) ஒப்புதலில்லாரது நண்பய். ... 10.

இழிபின்றெனப்படுவதியாதெனின்யாதுங்
கிழமையக்கீழ்ந்திடாநட்பு. ... ... 1.

உப்பிற்குறுப்புக்கெழுதகைமைமற்றதன்
றப்பாய்தல்சான்றோர்கடன். ... ... 2.

செய்தகநட்பெவன்செய்புங்கெழுதகைமை
அய்தாங்கமையாக்கடை. ... ... 3.

கேளார்துவேண்டியிருப்பர்கெழுதகையால்
நாளாதிநட்டார்செயின். ... ... 4.

பேதைமையொன்றேபெருங்கிழமையென்றுணர்க
தீதக்கநட்டார்செயின். ... ... 5.

சொல்லக்கணின்றூர்துறவார்தொலைவிடத்துந்
தொல்லைக்கணின்றூர்தொடர்பு. ... ... 6.

அழிவந்தசெய்யினுமன்பறூரன்பிற்
கெழிவந்தகேண்மையவர். ... ... 7.

கேளிழுக்கங்கேளாக்கெழுதகைமைவல்லார்க்கு
நாளிழுக்கநட்டார்செயின். ... ... 8.

கெடாஅவழிவந்தகேண்மையார்கேண்மை
விடாஅர்விழையுமுலகு. ... ... 9.

பண்பின்விழையப்படுபபழையார்கட்
டண்பிற்றலைப்பிரியாதார். ... ... 10.

(இறய்முறய்வருக்கு) இழிவில்லாத பண்பெனப்படுவது எதுவென்னுமிடத்து யாதொருவிதத்தும் (தத்தம்) உரிமயய்ச் சிதய்வுசெய்யாத நண்பாம். ... ... 1.

(இறய்முறய்வர் தம்மூள்) இனிமயுண்டாதற் கடயாளமாவது கேண்மயாகுந்தகுதியாம் ஏனய தன்மயின்றவறுகளய் ஆய்ந்து காணல் நிறய்ந்தோர் கடனும். ... ... 2.

(இறய்முறய்வர்புறத்தே) செய்யத்தக்க நண்பு எவனென்றிகழும்படி செய்யுஞ்(சீர்மயாற்)கேளாகுந்தகுதி அழகிதாக அவ்வுள்ளத்தி லமய்வுபெறுத கடயிடத்து. ... 3.

(இது என்னென்றுங்) கேளாது விரும்பியிருப்பார் (சீர்மயுற்ற) கேளாகுந்தகுதியாற் பழமயாக நட்புற்ற இறய்முறய்வர் செய்யுமிடத்து. .... 4.

இறய்முறய்வர்) பேதமயாக (எண்ணுவதிற் பயன்) ஒன்றுண்டோ பெரியவுரிமயென்று (சாய்வுற்று) உணரக்கடவர் தீயசெயல்களய் நண்பாயினர் செய்யுமிடத்து. ... 5.

(சாய்வென்று) கூறுமப்பண்பினிடத்து நின்ற இறய்முறய்வர் விடார் தொலய்வுவந்தவிடத்தும் பழமயான கேண்மயிடத்து நின்றவரது தொடர்பய். ... ... 6.

(ஒருவர்) கேடுவந்தனவாய வினய்களயே செய்யுமிடத்தும் (தமது) அன்புநீங்கார் அன்பிடத்தால் (ஏந்துதல்) பொருந்திவந்த கேண்மயுடய இறய்முறய்வர். ... ... 7.

கேளாயினரது இழிசெயல்களய்ப் (பிறர்கூறினும்) கேளாத கலப்புத்தகுதிவல்ல இறய்முறய்வருக்கு (ஏந்தும்) நாளாம் இழிவுகளய் நண்பினர் செய்யுமிடத்து. ... 8.

(இறய்முறய்மய்) கெடாதவழியேவந்த கேண்மயுடயாரது கேளாந்தன்மயய் விடாத இறய்முறய்வரய் விரும்பிநிற்கும் (எல்லா) உலகமும். ... . 9.

குணங்களாலெ (யாவரும்) விரும்பப்படுவனவாய செயல்களயுடய பழமயான இறய்முறய்வரே தம்மிடத்த சாந்தத்தினின்றுமிடம் பிரிதலிலராவார். ... ... 10.

பருகுவார்போலினும்பண்பிலார்கேண்மய்
குருகலிற்குன்றலினிது. ... ... 1.

உறினட்டறிஞருமொப்பிலார்கேண்மய்
இறினுமிழப்பினுமென். ... ... 2.

நள்வதிற்சீர்தூக்குநட்பும்பெறுவது
கள்வாருங்கள்வருநேர். ... ... 3.

அம்ரகத்தாற்றறுக்குங்கல்லாமாவின்னுர்
தமரிற்றனிமய்தலய். ... ... 4.

செய்தேமஞ்சாராச்சிறியவர்புன்கேண்மய்
எய்தலினெய்தாமய்நன்று. ... ... 5.

பேதய்பெருங்கெழீஇநட்பினறிவுடயா
ரோதனங்கோடியுறும். ... ... 6.

நத்துவாராகியநட்பிற்பகய்வரா
லொத்தடித்தகோடியுறும். ... ... 7.

ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மய்
சொல்லாடார்சோரவிடல். ... ... 8.

மல்கனவுமின்னுதுமன்னுவினய்வேறு
சொல்வேறுபட்டார்தொடர்பு. ... ... 9.

மன்றகுறுகுதலோம்பன்மனய்க்கெழீஇ
துன்றப்பழிப்பார்தொடர்பு. ... ... 10.

(பசித்து) உண்பவர்போன்ற விருப்புடையராய்விடத்தும் (சீர்மய்ப்) பண்பில்லாரது கேளாந்தன்மய் (கேளாளருக்குப்) பெருகலிடத்த பெருமயினுங் குறய்தல் நன்றும். 1.

(தமக்குத் துன்பம்) உற்றவிடத்து நட்புற்று அற்றவிடத்து நீங்கும் வேறுபாடுடையார் கேளாந்தன்மய் கெட்டவிடத்தும் விட்டவிடத்துங் (கேளாளருக்கு) என்னய். ... 2.

(நிரவுதலாக) நட்புறுமிடத்துத் (தமக்காகுஞ்) சீர்மயே நிறுத்துப்பார்க்கும் நண்பரும் பெறும்பொருள் கவரும் பொதுமாதரும் திருடரும் (வஞ்சத்தால்) ஒப்பாவார். ... 3.

போர்செய்யு முய்த்தபூமியில் (தன்னசமானுக்கு) வழியறுத்தோடுங் கலவியில்லாத குதிரயய் ஒப்பாவார் (நிரவு) தமாதலினுந் தனிமயே (கேளாளருக்கு) உயர்வாம். 4.

(கேளாளருக்குப் புனய்வு) செய்து பாதுகாத்தல் சாராத சிறியதன்மயாரது புல்லியகேண்மயானது அடியுமிடத்த கேட்டினும் அடயாமய் நன்றும். ... ... 5.

(கேளாளருக்குப் புனய்வுணராத) அறிவிலார் பெரிதாகக் கலக்கும் நண்பிடத்திலும் (அதய்) அறிபவரால் வருமழுக்யிடத்திற் கோடிமடங்கதிக நன்மயுண்டாம். ... 6.

(மறய்வின்றித் தம்பயனய்) விரும்புவாராகிய நண்பிடத்திலும் (அவ்வாறுவிரும்பாத) பகய்வராலே (கேளாளருக்குப்) பொருந்தியுதித்தநன்மய்கோடிமடங்கதிகமுண்டாம். 7.

(கேளாளர் மறய்வு) பொருந்தும் வினய்களய்ப் (பொருந்தாதவாக) விட்டுவிடுபவரது கேளாந்தன்மயய்ப் (பிறர்பாற்) சொல்லாராகி நெகிழவிடுதல் வேண்டும். ... 8.

(கேளாளரது) மலிகின்ற கனவின்கண்ணுஞ் (சீர்மய்க்கு) இனிமய்பயவாதாம் நிலய் ஒழிந்த செய்கயவேறுகவும் சொல்வேறுகவும் உடயவரது தொடர்பால். ... 9.

(கேளாளர்) மிகவுமடுத்துக் கொள்ளுதலய் ஒழித்துவிடுதல்வேண்டும் மன்யின்கட்கேண்மய்கொண்டாடிப் (புறம்) பொருந்தப் பழிகூறுவாரது தொடர்பய். ... ... 10.

ஏரிடங்காணினெறிதற்குப்பட்டடய்
நேராநிரந்தவர்நட்பு. ... ... 1.

இனம்போன்றினமல்லார்கேண்மய்மகளிர்
வினய்போலவேறுபடும். ... ... 2.

மாகலய்கற்றக்கடய்த்துமனநல்ல
ராகுதன்மாணூர்க்கரிது. ... ... 3.

அஞ்சாதினியநகாவகத்தின்னுப்
பஞ்சயயஞ்சப்படும். ... ... 4.

எல்லலமயாதவரயெனய்த்தொன்று
மல்லலாற்றேறற்பாற்றன்று. ... ... 5.

நல்லார்போனல்லவய்சொல்லினுமொட்டார்சொ
லொல்லயுணரப்படும். ... ... 6.

ஒல்வணக்கமொன்னூர்கட்கொள்ளற்கவில்வணக்கங்
கொல்கய்குறித்தமயால். ... ... 7.

பழகுகய்யுள்ளும்படயொடுங்குமொன்னு
ரழுதகண்ணீருமனய்த்து. ... ... 8.

நட்பினுட்டம்மெள்ளுவாரய்நகச்செய்து
தட்பினுட்சாப்புல்லற்பாற்று. ... ... 9.

முகநட்பாங்காலம்வருங்கான்முகநட்
டுகநட்பொரீஇவிடல். ... ... 10.

(தமராயினுர் கோணறிருத்தற்கு) அழகியஇடத்தய்க்காண் இல் (கோணிரும்பய் நேராக) அடித்தற்குத் (துணயாகும்) அடய்கல் நிகராம் சரிக்கலப்புற்ற சீரினர் நண்பு. ... 1.

(நிரவுக் கலப்புள்ள) இனத்தய்ப்போன்று அவ்வினப் பண்பல்லாத சீரினர் கேளாந்தன்மய் (வஞ்சப்) பெண்களது வினய்களய்ப்போல வேறுபட்டுவிடும். ... ... 2.

பெரிய கலய்களயெல்லாங் கற்றகடயிடத்தும் மனத்தின் நன்மயுட்யராகுதல் (நிரவுதலால்) மாட்சிமய்ப் படாத சீரினருக்கு அருமயாம். ... ... 3.

(அஞ்சவேண்டு மவய்கட்கு) அஞ்சாமலும் இனியன கண்டு மகிழாமலும் உள்ளத்துத் துன்பமூடய எளிமயய்ச் (சீரினரினமாக்குதற்கு) அஞ்சவே (நிரவுதல்) உண்டாம். 4.

(சீரினர்) விளங்குதலமயப்பெறுதாரய் எப்படிப்பட்டதாகவு மொன்றுந்துன்பத்தால் (நிரவுதலுடயராகத்) தெளியும் பான்மயுடயதன்றும். ... ... 5.

நல்ல சீரினர்போல நன்மயுள்ள மொழிகளய்ச்சொல்லியவிடத்தும் பொருந்தாரது சொற்களய் விரய்விலறியவே (நிரவுதல்) உண்டாம். ... ... 6.

(சீரினர்) பொருந்திய வணக்கத்தய்ப் பொருந்தாரிடத்து (நன்மயாக்) கொள்ளாதொழிக விலலின்வணக்கமானது கொலயயே குறித்து நின்றமயால். ... ... 7.

(தொழுது) பழகுகின்றகய்யினுள்ளும் (கொல்லும்) ஆயுதமடங்கியிருக்கும் ஒன்றுபடாத பகய்வர் (சீரினர்போல்) அழுதகண்ணீரும் அத்தன்மய்த்தாம். ... ... 8.

(சீரினர் நிரவலானது) நண்பிடத்துத் தம்மயிகழுகின்றவரயும் மகிழும்படிசெய்து (தமது) தண்மயிடத்துண்மயால் (அவர்பண்பு) ஒழியும்படி பொருந்தும் பான்மயதாம். ... 9.

(சீரினர்) முகமாத்திரயாக நட்புச்செய்யுங் காலம்வருமிடத்து (அம்) முகமாத்திரயே நண்புற்று உகும்படியாக (ஆக) நட்பயொழித்துவிடல் வேண்டும். ... ... 10.

ஏதமய்வென்பதொன்றியாதெனினேதங்கொள்
போததுபோகவிடல். ... ... 1.

பேதமயுளெல்லாம்பேதய்மய்காதன்மய்
தீதாமதன்கட்செயல். ... ... 2.

நாணுமய்நாடாமய்நாரின்மய் யாதொன்றும்
பேணுமய்பேதய்தொழில். ... ... 3.

ஓதியுணர்ந்தும்பிறர்க்குரய்த்துந்தானடங்காப்
பேதயிற்பேதயாரில். ... ... 4.

ஏன்முற்செயலாற்றும்பேதயெழுமயு
மான்புக்கழுந்துமளறு. ... ... 5.

காதலாமொன்றேபுனய்பூணுங்கய்யறியாக்
கோதில்வினய்மேற்கொளின். ... ... 6.

பெருகயலாராரத்தமர்பசிப்பர்பேதய்
உரய்புனய்வுற்றக்கடய். ... ... 7.

கய்யலொருவன்களித்தற்றேற்பேதய்தன்
பெய்யொன்றுடய்மய்பெறின். ... ... 8.

பீழயில்பேதயார்கேண்மய்பிரிவின்க
ணீழய்தருவதொன்றில். ... ... 9.

வழியகாற்பள்ளியுள்வய்த்தற்றேற்சான்றோர்
பிழய்படப்பேதய்புகல். ... ... 10.

(சீரினருக்கு) ஏதுவாக அமய்வுள்ள (புனய்) வென்பது ஒன்று எதுவென்னுமிடத்துக் குற்றங்கொள்ளும்படி(வரும்) போது அதய்ப் (பற்றுது) போகவிடுதலாம். ... 1.

(சீரினருக்கு) அறியாமய் பலவுள்ளும் (பெரிய) அறியாமயாம் விருப்பப்பண்பய்ப்(புனய்வுக்குத்)தீங்குண்டாகும் வினயின்கட் செய்குதல். ... ... 2.

(நாணுமவய்கட்கு) நாணமயும் (நாடுமவய்களய்) நாடாமயும் (தமர்பால்) அன்பின்மயும் யாதொருவினயும்பேணமயும் (புனய்வுகாணு) அறிவில்லார் தொழிலாம். ... 3.

(நூல்களய்க்) கற்றுணர்ந்தும் பிறருக்கு எடுத்துரய்த்தும் தான் (புனய்வுற்று) அடங்காத அறிவிலானிடத்தறியாமயினும் அறியாமயுடயார் (பிறர்) இல்லய். ... ... 4.

(சீரினருக்குரியபுனய்வு) பொருந்துதற்கு முற்படவேவினய் தொடங்கும் பேதய்மயானது (சீர்மய்) எழுமிடத்து முறுதியாகப்புகுந்து அழுந்துமளறின்கண். ... 5.

(சீரினருக்கு) விருப்புண்டாகும் அதுவொன்றுதானே புனய்வுந்தானே பொருந்தும் வெறுப்பறியாத குற்றங்களில்லாதவினயங்களய் மேற்கொள்ளுமிடத்து. ... ... 6.

பெருகிவந்த அயலவரெல்லாம் நிறய்வடயத் தமராயினெரெல்லாம் பசித்துவருந்துவார் (புனய்வு)அறியாதவன் பொருட்புனய்வுற்ற கடயிடத்து. ... ... 7.

நல்லொழுக்கமில்லாத வொருவன் (கள்ளபுமுண்டு) களிக்கும் அத்தன்மய்த்தாதலாம் அறிவிலான் தன்னுடய பொருளுடன்பெய்யுமற்றோருடய்மயய்ப்பெறுமிடத்து. 8.

(சீரினருக்குத்) துன்பமில்லாத (இன்பமாம்) அறிவில்லாரது கேண்மயால் (என்னெனில் அவர்) பிரிவிடத்துத் துன்பமுண்டாவதொன்று மில்லய் (ஆதலால்). ... 9.

(புழுதிசெறிந்த) வழிச்சென்றனவாயகால்களய்த் (தூய) சயனத்துள்வய்க்கு மத்தன்மய்த்தாதலாம் சால்புடய சீரினரிடத்துப் பிழயுண்டாக அறிவிலான் புகுதல். ... 10.

பின்மறவின்மையுளின்மைப்பிறிதின்மை
உன்மையாவையாதுலகு. ... ... 1.

இன்னலானெஞ்சுவந்தீதல்பிறிதியாது
பின்னைப்பெறுவான்றவம். ... ... 2.

பெறுகிலார்தாந்தம்மைப்பீழிக்கும்பீழை
செறுவார்க்குஞ்செய்தலரிது. ... ... 3.

உடைமையெனப்படுவதியாதெனினெண்மை
இடையம்மையென்னுஞ்செருக்கு. ... ... 4.

கல்லாதமேற்கொண்டொழுகல்கசடற
வல்லதூஉமையந்தரும். ... ... 5.

தற்றமறத்தலோபுல்லறிவுதம்வயின்
மற்றமறவாவழி. ... ... 6.

அருமறச்சோருமறிவிலான்செய்யுந்
தருமிறைதானேதனக்கு. ... ... 7.

ஏவவுஞ்செய்கலான்முன்றேரானவ்வுயிர்
நோவாரளவுமோர்நோய். ... ... 8.

கண்டாஞைக்காட்டுவான்முன்காணுன்காணுதான்
தண்டுவான்முன்கண்டவாறு. ... ... 9.

உலகத்தாருண்டென்பதில்லென்பான்வையம
லினமாய்வைக்கப்படும். ... ... 10.

(சிரினருக்குப்) பிற்பட (மறய்க்கவேண்டுமவய்களய்) மறயாமயே உள்ளமின்மயாம் பிறிதாய இன்மய்களயெல் லாம் மனப்பழுதாக வய்த்தெண்ணுது உலகம். ... 1.

(மனவிருக்கத்தால்) துன்பமுடயான் நெஞ்சமுவப்புற்று (ஒன்றய்க்) கொடுத்தல பிறிதென்னய் பின்பு அதனய்ப் பெறுஞ் சிரினன்தபித்தலேயாம். ... ... 2.

(மறய்வு)பெறும்வலிமயில்லாத சிரினர்தாம் தம்மய் வருத்துகின்ற வருத்தத்தய் (அதுசெய்வித்த) பகய்வருக்கும் (மாறுகச்) செய்தலரிதாய்விடும். ... ... 3.

(சிரினருக்கு) உட்பமயென்று சொல்லப்படுவது ஏதுவென்னுமிடத்து (மறய்வாய) ஒள்ளியபண்பு நம்மிடத்துடயோம் யாமென்றெண்ணுங் களிப்பாம். ... ... 4.

(சிரினர்) கற்காதவய்களய் (மறய்வின்றி) மேற்கொண்டு நடத்தலானது குற்றமறும்படிகற்று வல்லவினயிலும் (யாவருக்குஞ்) சந்தேகங்கொடுக்கும். ... ... 5.

(சிரினர்) தத்தமக்குரியவய்களய் மறய்க்குதல் ஒழிக்கத் தக்க புல்லறிவாம் தம்மிடத்துள்ள வேறுயவய்களய் மறய்த்துவய்த்தொழியா விடத்து. ... ... 6.

(தமர்களுள் நிகழ்ந்த) அரிய இரகசியங்களப்சோர்ந்து வெளியிடுகின்ற அறிவில்லாதவன் (மனஞ்) செய்துகொடுக்குங் கேடுதானுகவேதனக்கு. ... ... 7.

(மறய்த்தற்குரிய வென்று) ஏவுதல்செய்தும் (அவ்வாறு) செய்யான் தானுகவுந் தெளிந்தாற்றுன் அந்தவுயிரானது நோவார்ந்து(சாகும்)அளவுஞ்(சிரினருக்கு)நோயாம். 8.

(மறய்வு காணுனுக்குக்) கண்டவனுகிக் காட்டப்புகுஞ் சிரினனே தான்காணுதவனுவான் அக்காணுதவன் விலகிற்பான் (அறிவின்மயால்) தான்கண்டவழியின்கண். ... 9.

(உலகத்துற்ற சிரினர் உண்டென்பதாய (மறய்வய்) இல்லயென்பவுனுக்குத் தன்வய்ப்பிடத்திற்கே குற்றமாகவய்த் தெண்ணும் (பிழய்) உண்டாகும். ... ... 10.

ஒண்பயிலெல்லாவுயிர்க்கும்பகலென்னும்
பண்பின்மய்பாரிக்குநோய். ... ... 1.

இன்னுமய்ப்பற்றுசெயினுமிகல்கருதித்
தன்னுற்செய்யாமய்தலய். ... ... 2.

ஏவிகலெவ்வநோய்நீக்கிற்றவலில்லாத்
தாவில்விளக்கந்தரும். ... ... 3.

இன்பத்துளின்பம்பயக்குமிகலென்னுந்
துன்பத்துட்டுன்பங்கெடின். ... ... 4.

இகலெதிர்சாய்ந்தொழுகவல்லாரய் யாரோ
தகலுக்குந்தன்மயவர். ... ... 5.

இகலின்மிகலினிதென்பவன்வாழ்க்கய்
நகலுங்கெடலுநணித்து. ... ... 6.

இன்னுவின்மெய்ப்பொருள்காணுரிகன்மேவு
மன்னீரறிவினவர். ... ... 7.

இகலிற்கெதிர்சாய்தலாக்கமதனய்
உகலுக்கினுக்குமாங்கேடு. ... ... 8.

அகல்காணுலக்கம்வருங்காலதனய்த்
தகல்காணுங்கேடுதரற்கு. ... ... 9.

நன்னயமின்னுதவெல்லாநகலாலுஞ்
சென்னயமென்னுஞ்செருக்கு. ... ... 10.

(கேளாண்மயாய) ஒளியிற்றங்கிய எல்லா வுயிர்கட்கும் (சாய்வினின்றும்) வேறுபடுதலென்னுங் கெடுகுணமானது (கேடு) பெருகச்செய்யும் நோயாம். ... ... 1.

(ஒருவன்) இன்பம் பயவாத தன்மயுடய வேற்றுமயய்ச் செய்தவிடத்தும் (கேளாளன்) அப்பகயக்கருதித் தன்னல் (ஒருபகய்) செய்யாமயே தலய்மயாம். ... ... 2.

(கேளாளர்) ஏவும்பகயால் வருகின்ற துன்பநோயய்ச் சகிதகொழிக்குமிடத்து (அது அவருக்குக்) குறய்தலில்லாக் கெடுதலற்ற விளக்கத்தய்க்கொடுக்கும். ... 3.

(கேளாளருக்கு) இன்பங்களுளெல்லா மேலான இன்பத்தய்க்கொடுக்கும் (பிறரால்வரும்) பகயென்னுந் துன்பத்துளெல்லாந் துன்பங் கெடுமிடத்து. ... ... 4.

(பிறரது) பகய்மய்க்கெதிரிற் சாய்ந்து நடக்கவல்ல (களய்வுடய) கேளாளரய் யாவரோ தக்கபடி தளர்வு செய்யுந் தன்மயுடயவர். ... ... 5.

(களய்வின்றி யாரும் பிறர்) பகயிடத்து மேற்படுதல் நன்றென்னுங் கேளாளன் வாழ்க்கயானது (பிறரால்) சிரிக்கப்படுதலுங் கெடுதலுஞ் சமீபமாகவுடயதாம். ... 6.

துன்பத்தினிடத்துள்ள மெய்யான பொருளய்க் காணுதவராவார் பகயாதலய்த்(தாமும்)மேற்கொள்ளும் (உறவு) அல்லாத நீர்மய்வாய்ந்த அறிவுறுகேளாளர். ... ... 7.

(கேளாளர் பிறரது)பகய்மய்க்கு எதிரிற் சாய்ந்து கொள்ளலே (உறவிற்கு) ஆக்கமாம் அப்பகயய் எதிர்த்துச் செல்லுமிடத்து உய்த்து விடுமாங்கேட்டில். ... ... 8.

(கேளாளன் சாய்தற்றன்மயய்) வேறுகக்காணுன் ஆக்கம் வருங்காலத்து (அவ்வேற்றுமயய் அவர்மனந்) தகுதியாகக் காணுங் கெடுதலப்க்கொடுத்தற்கு. ... ... 9.

(கேளாளருக்கு) நல்ல நயமாகும் இன்பம் பயவாத எல்லாவற்றயும் விளங்குதலாலுண்டாகுஞ் செல்லத்தக்க நற்பண்பென்றேற்குங் களிப்பால். ... ... 10.

வலியார்க்குமாறேற்றலோம்புகவோம்பா
மெலியார்மேன்மேகபகய். ... ... 1.

அன்பிலனென்றதுணயிலன்முன்றுவ்வா
னென்பரியுமேதிலான்றுப்பு. ... ... 2.

அஞ்சுமறியானமய்விலனீகலான்
பஞ்சயெளியன்பகய்க்கு. ... ... 3.

நீங்கான்வெகுளிநிறயிலனெஞ்ஞான்றும்
யாங்கணும்யார்க்குமெளிது. ... ... 4.

திண்பிலன்வாய்ப்பனசெய்யான்பழிநோக்கான்
பண்பிலன்பற்றூர்க்கினிது. ... ... 5.

காணுச்சினத்தான்கழிபெருங்காமத்தான்
பேணுமய்பேணப்படும். ... ... 6.

மாணுக்கொளல்வேண்டுமன்றவடுத்திருந்து
சேணுதசெய்வான்பகய். ... ... 7.

குணனிலனுய்க்குற்றம்பலவாயின்மாற்றூர்க்
கெணனிலனுமேமாப்புடய்த்து. ... ... 8.

அஞ்சார்க்குச்சேணிகவாவின்பமறிவிலாப்
பிஞ்சும்பகய்வர்ப்பெறின். ... ... 9.

செல்லான்வெகுளுஞ்சிறுபொருளெஞ்ஞான்று
மொல்லானயொல்லாதொளி. ... ... 10.

(சாய்வினர்தம்மில்) வலியவருக்கும் (பிறரால்வரும்) பகயேற்குதலய் ஓம்பக்கடவர் (அவ்வாறு) ஓம்பாத மெலியவர்மேலும் மேற்கொள்ளக்கடவர் பகயய். ... ... 1.

(தமர்கள்பால்) அன்பில்லானும் விரிந்ததுணயில்லானுந் தன்னில் வலியில்லானுமாயசாய்வினன்(பகயானது) எப்படியறுத்துவிடும் பகய்வனது வலிமயய். ... ... 2.

(பிரிவுழிற்) பயப்படுகின்ற அறியாமபுடயானும் அமய்வில்லானும் ஈகயில்லானுமாயசாய்வினன்வலிமயற்ற எளியனுவான் (பிறர்) பகயேற்றற்கு. ... ... 3.

(யாவரிடத்தும்) நீங்குதல்செய்யான்கோபத்தினின்றும் நிறய்வு மில்லானுய்சாய்வினன் எக்காலத்தும் எவ்விடத்தும் யாவருக்கு மெலியதன்மபனுவான். ... ... 4.

(தமரொடு நிற்குங்) கிட்பமில்லானும் (பயன்) வாய்ப்பனவற்றய்ச் செய்யானும் பழியய்நோக்கானுமாயசாவினன் பகய்வருக்கு இனியவனுவான். ... ... 5.

(அளவு) காணுதகோபத்தயுடயானும் (அறிஞரால்) கழிக்கப்பட்ட பெரியகாமமுடயானுமாயசாய்வினனது பகய்ம யய்ப் (பிறர்) பேணும்படி (இடம்) உண்டாம். ... 6.

(சாய்வினர்) மாட்சியுடபதாகக் கொள்ளுதல்வேண்டும் வெளிப்படயாக அடுத்திருந்தும் உயர்வில்லாத செயல்களய்ச் செய்பவன் பகயய். ... ... 7.

(சாய்வினன்பகயேற்குங்)குணனுதலில்லானுய்க் குற்றங்களும் பலவுளனுயவிடத்துப் பகய்வருக்கு மதிப்பில்லானுகு மேமாத்தலுடபதாம். ... ... 8.

(ஏற்றற்கு) அஞ்சாதசாய்வினருக்கு உயர்வகலாத இன்பமாம் (பகய்வித்தம்) அறிவில்லாத பின்வாங்கும்பகய்வரய்க் கிடய்க்கப்பெறுமிடத்து. ... ... 9.

(மேற்)செல்லாதவன் கோபஞ்செய்யுஞ் சிறியபொருளயுமெக்காலத்தும் (பகயேற்றலாற்) பொருந்தாத சாய்வினனுய்ப் பொருந்தாததாகும் விளக்கம். ... ... 10.

பகையென்னும்பண்பிலதனையொருவ
னகையேயும்வேண்டற்பாற்றன்று. ... ... 1.

கொல்லாறுழுவர்பகய்கொளினுங்கொள்ளற்க
பல்லாறுழுவர்பகய். ... ... 2.

இல்லாெவரினுமேழய்தமியனுய்ப்
பல்லார்பகய்கொள்பவன். ... ... 3.

பகய்நட்பாக்கொண்டொழுகும்பண்புடயாளன்
தகய்மய்க்கட்டங்கிற்றுலகு. ... ... 4.

தன்றுணயின்றுற்பகயிரண்டாற்றுணெருவன்
கொன்றுணயாக்கொள்கவற்றிணென்று. ... 5.

தேறினுந்தேறுவிடினுமழிவின்கண்
வேறுன்பகாவன்விடல். ... ... 6.

மென்மயிணெந்ததறியார்க்குமேவற்க
அன்மய்பகய்வரகத்து. ... ... 7.

வகயறிந்துதற்செய்துதற்காப்பமாயும்
பகய்வர்கட்பட்டசெருக்கு. ... ... 8.

கொய்காலய்முண்மரங்கொல்ககளயுநர்
கய்கொல்லுங்காழ்த்தவிடத்து. ... ... 9.

செம்மயுளரல்லர்மன்றசெயிர்ப்பவர்
செம்மல்சிதய்க்கலாதார். ... ... 10.

